Registered No. M. 878.

139

# பூர்ணசந்திரோதயம்.

## A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization.

தொகுதி 6 } 1915௵ செப்டம்பர்௴ / ராக்ஷஸ௵ புரட்டாசி௴ { பகுதி 5.

அ. ரங்கசாமி ஐயர், B.A.,B.L.,F.T.S, பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ. 2.          தனிப்பிரதி அணா 4.

மதுரை:

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Reserved.

## பொருளடக்கம்.

## CONTENTS.

பக்கம்

1. தற்கால நிலைமை--அ. ரங்கசாமி ஐயர். B A., B L., F.T S, 153
From the Editor-A. Rangasamy Iyer. B.A., BL., F.T.S.

2. மஹாத்மாக்களின் தொழில்—C. W. லெட்பீடர் 161
Work of the Masters—C. W. Lead-beater.

3 ஆயுளின் முக்யமான கருத்து-R. பஞ்சாபகேச ஐயர் 168
The Important Thing in Life-R. Panchapagesa Iyer

4. உதயதிசை நக்ஷத்ர ஸங்கம் } B. S. இராமசுப்பையர் 173
The Order of the Star in the East-B.S. Ramasubbier

5. ஹிந்து ரஸாயன சாஸ்திரம் } R. S. நாராயணஸ்வாமி ஐயர் 178
Hindu Chemistry—R. S. Narayanasamy Iyer.

6. வாழ்விசைப்பா-பண்டித ம. கோபாலகிருஷ்ண ஐயர் 184
A Psalm of Life (Long fellow) } Pandit M. Gopala-krishnier

7. நக்ஷத்ர தூதர்களின் ஸங்கம் } B. S. இராமசுப்பையர் 186
Servants of the Star—B. S. Ramasubbier.

8. சிறுவர்க்குரிய விஷயம்—வஸந்தானந்தன் 191
Children's Corner—Vasanthananda.

9. சமாசாரம். 194
News.

10. புத்தக வரவு. 196
Review of books.

11. தியானக்கிரம விஷயம்-கே எஸ். இராமச்சந்திர ஐயர். 197
Meditations—K. S. Ramachandra Iyer.

---

## பிரஹ்மக்ஞான ஸபை.

இது 1875 ௵ நவம்பர் ௴ 17௳ நியூயார்க்கு நகரில் உண்டாகி 1905 ௵ ஏப்ரல் ௴ 3௳ மதராஸில் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் நோக்கங்கள்:—

1. ஜாதி, மதம், பால், வர்ணம் இவ்வேற்றுமைகளின்றி, மநுஷ்ய வர்க்கத்தினரின் ஸர்வத்ர ஸஹோதர பாவத்தை அதிகரிக்க, அஸ்திவாரமாக அமைவது.

2. ஸமதரிசன புத்தியுடன் இதர மதங்களையும் தத்துவ சாஸ்த்ரங்களையும் பிரகிருதி சாஸ்த்ரங்களையும் ஆராய்வது.

3. இதுவரை மநுஷ்யனுடைய நேரான அறிவுக்கு எட்டாத பல பிரபஞ்சநியதிகளை வியக்தமாயுணர்வதற்குச் சாதநமாக, மநுஷ்யனிடத்தில் குப்தமாயுள்ள சக்திகளை விகஸிக்கச் செய்வது.

# பூர்ணசந்திரோதயம்.

| | | |
|---|---|---|
| தொகுதி 6 | 1915௵ செப்டம்பர்௴<br>ராக்ஷஸ௵ புரட்டாசி௴ | பகுதி 5. |

## தற்கால நிலைமை.

உலகத்தின் கதியில் சில காலங்களில், ஜனங்கள் பக்தி மார்க்கத்தைப் பெரும்பான்மையாகத் தழுவுவது முக்கியமாகவும், சில காலங்களில் ஞான மார்க்கத்தைக் கொண்டாடுவது வெகு பிரயோஜனகரமாகவும், சில காலங்களில் கர்ம மார்க்கத்தில் நின்றுகொண்டு, இதரர்களுக்கு நன்மையைப் பயக்குகின்ற நிஷ்காம கர்மத்தை ஆதாரமாயுடைய கர்ம யோகத்தைக் (Path of Service.) கைக்கொள்ளவது உசிதமாகவும் தோன்றுகின்றது. தற்கால நிலையில் கர்ம மார்க்கமே முதன்மையாகக் காணப்படுகின்றது. எல்லாச் செய்கைகளைக் காட்டிலும் சரீரபலத்தையும் உறுதியையும் அதிகமாக உபயோகப்படுத்தி, தேசாபிமானம், ராஜவிசுவாஸம், மனோதைர்யம் இம்மாதிரியான குணங்களை ஆதாரமாகக் கொண்டு, கைக்கொண்ட கார்யங்களை ஸாதிக்கும்படியான விவேகம், புத்தி தீக்ஷண்யம், முதலிய மனோசக்திகளை

வெளிப்படுத்துவதும், முதன்மையாக கிரியாலக்ஷணங்க ளோடுபொருந்தியதுமான தற்காலத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் யுத்தமே இக்காலமானதுகர்மமார்க்கத்திற்குரிய காலமென்று சூசிப்பிக்கின்றது. ஏனென்றால் யுத்தத்தில் போர்புரியும் யுத்தவீரர்கள் அவர்களது சுயநன்மையை நாடி யுத்தம் செய்பவர்களல்லர். போர்க்களத்தில் நிகழ்வதும், ஸாஹஸத்தோடு கூடியதும், மரணத்தையும், அகோரமான பலன்களையும் விளைவிப்பதால் கொடியனபோல் தோன்றுவதுமான செய்கைகள் நிஷ்காம கர்மங்களின் ஸ்வபாவத்தைப் பெரும்பாலும் தழுவிநிற்கின்றன. ஆகையால் தான் ஸூர்யனால் மநுவுக்குச் சொல்லப்பட்டு, பிறகு மநுவால் இக்ஷ்வாகுவுக்கு உபதேசிக்கப்பட்டு, அதற்கப்பால் பரம்பரையாய் ராஜரிஷிகள் அறிந்த, மஹத்தான காலகதியினால் லோபமடைந்த கர்மயோகமானது ஸ்ரீகிருஷ்ண பகவானால் அர்ஜுநனுக்கு அகோரயுத்த ஆரம்பத்தில், அவனுக்கு யுத்தத்தில் உத்ஸாஹத்தைப் புகட்டுவதற்காக உபதேசிக்கப்பட்டது என்று சொல்லப் படுகிறது. பகவான் யுத்தகாலத்தில் இரண்டுஸேனைகளுக்கும் மத்தியில் அர்ஜுநனுக்கு உபதேசித்தருளியதாகச் சொல்வது, அவ்விதமாக அக்காலத்தில் நடந்தவாறே கூறுகின்றதா அல்லது கர்ம யோகத்தை அப்யஸிக்கவேண்டிய காலம் அக்காலந்தான் என்பதை சூசிப்பிக்கின்றதா என்பதில் பலருடைய அபிப்ராயங்கள் வேறுபட்டிருப்பினும், உலக சரித்திரத்தில் இம்மாதிரியான காலங்கள் கர்ம மார்க்கத்தை மனிதர்கள் தீவ்ரமாய்த் தழுவுதற்குரிய காலங்களென்றே சொல்லத்தகும்.

***

தற்காலத்தில் உலகமுழுவதும் யுத்தமுகமாய் நிற்கின்றது. ஆகையால் உலகத்தில் எங்கு சென்றாலும், இங்கிலாந்து, பிரான்ஸ், இந்தியா எத்தேசமாயினும், அதில் 'சுயநலத்தைக் கருதாது கர்மத்தைச் செய்' என்ற உபதேசமா

னது எங்கும் நிறைந்து நிற்கின்றது. இங்கிலாண்டு முதலிய தேசங்களில் யுத்தத்தில் காயப்பட்டவர்களுக்கு வேண்டிய உதவிபுரிதற்கு, ஜனங்கள் தம் காலம், தனம், ஸாமர்த்யம் அன்பு முதலியவைகளை வரம்பின்றி அபரிமிதமாக உபயோகித்து வருகின்றனர். புருஷர்கள் யுத்தத்திற்குச் செல்ல, அவர்கள் அப்படி யுத்தத்திற்குச் செல்லுமுன்னர், வகித்துவந்த ஸ்தானங்களை ஸ்திரீகள் அடைந்து, ஊக்கத்துடன் அவ்வேலைகளைப் பார்த்து வருகின்றனர். ஸ்திரீகள் தபாற் சேவகர்களாகவும், தோட்டக்காரர்களாகவும், மோட்டார்வண்டிகள் ஓட்டுகிறவர்களாகவும், குமாஸ்தாக்களாகவும், யந்திரத்தினால் ஓடும் பலவித வண்டிகளில் கார்டுகளாகவும் (காவலாளிகளாகவும்) பீரங்கிமருந்துகள், குண்டுகள் முதலிய யுத்தசாமான்களைத் தயாரிக்கும் யந்திரசாலைகளில் வேலைக்காரர்களாகவும், இன்னும் இதற்குமுன் புருஷர்களுக்கு மட்டும்தகுதியானவைகளென்றுபாவிக்கப்பட்ட தொழில்களிலும் அமர்ந்திருக்கின்றனர். யுத்தங்களிலோ பிரபுவும், கூலிக்காரனும், தரித்ரனும், தனவந்தனும் அவரவர்களுக்குள் ஸாதாரண காலங்களில் ஏற்பட்ட வித்யாஸங்களைத் துறந்து, அவர்களுக்குப் பொதுவாகிய ராஜ்ய நன்மையைக்கருதிச் சமமாய் நின்றுகொண்டு போர் புரிகின்றனர்.

***

இப்போரின் வெளித்தோற்றங்கள் ஐரோப்பாக் கண்டத்தில் நிகழும் யுத்தத்தால் ஸ்பஷ்டமாகத் தோன்றினும், அவைகளை நுட்பமாய் ஒத்திருக்கின்ற ஸூக்ஷ்ம லக்ஷணங்கள் எல்லாத்தேசங்களிலும் பற்பல மாதிரியாகக் காணப்படுகின்றன. ஜனஸமூஹங்களில் அநேக காலங்களாக மேல், கீழ் என்ற ஏற்பாட்டுடன் இந்தியாவில் வர்ணாசிரம தர்மங்கள் என்று கூறப்படுவனவும், இதர தேசங்களில் அவைபோல ஏற்பட்டுள்ள ஜாதி அமைப்புகளும் அவ்வவற்

றின் ஆதாரங்களினின்று வழுவிக் கட்டிழந்தன போல் தோன்றுவதில், பழைய வழிகளுக்கும் இக்கால வியற்கைக்கும் யுத்தம் நேர்ந்துகொண்டிருப்பது போலத் தோன்றுகின்றது. மநஸ் ஸமாதானத்திற்கும் ஸந்துஷ்டிக்கும் இதுவரை ஸாதனமாகக் கைக்கொள்ளப்பட்ட கொள்கைகளும், ஆசரணைகளும், இன்னும் மற்ற ஆதாரதத்துவங்களும்பலங் குன்றி நிற்கின்றன. உலகத்தில் இப்போதிருக்கும் நிலைமையைக் குறித்து ஒரு அதிருப்தியும், இஹபர லோகங்களில் சுகத்தைக் கொடுக்கும் வழிகளைத் தற்கால அநுஷ்டானத்தில் வழங்கிவருகிற சமயங்களும் கொள்கைகளும் உண்மையாகக்கூறுகின்றனவா என்பதில் நம்பிக்கைக் குறைவும், அவ்வழிகளை அநுபவத்திற்குக் கொண்டுவருவதில் ஒரு சிரத்தைத் தாழ்வும் காணப்படுகின்றன.

***

மதவிஷயங்களிலும் தத்துவ விசாரங்களிலும், கிரந்தங்களினின்று வாதங்கள் மூலமாயும், யுக்திமுறையானுமெடுத்துக் கூறுபவர்களின் உபதேசங்களில் ஜனங்களுக்கு பக்தி குன்றி, ஐம்புலன்களுக்கும் அதீதமான தத்துவங்கள் ஸ்வாநுபவத்தாலும் ஸ்வாநுபவத்தையடைந்தவர்கள் மூலமாயும் அறியத் தக்கனவே யன்றி, மற்றையோர்களிட மிருந்து அறிந்துகொள்ள முயலுதல், குருடன் குருடனால் வழிகாட்டப் படுதல்போலும், என்ற நோக்கம் தற்காலத்தில் அதிகரித்து நிற்கின்றது.

***

ஐம்புலன்களுக்கும் கோசரமான பதார்த்தங்களைப் பரிசீலனைசெய்யும் பௌதிக சாஸ்திரங்களில் தேர்ச்சியடைந்த சாஸ்திரிகள் சுமார் 40, 50 வருஷங்களுக்கு முன்னர் பெரும்பாலும் நாஸ்திகர்களா யிருந்தார்கள். தற்காலத்தில் அந்த சாஸ்திரங்களில் முதன்மையான ஸ்தானத்தையடைந்திருக்கிறவர்கள் பஞ்சபூதங்கள் மூலமாய் அவைகளுக்குள் நின்றுகொண்டு அவைகளின் வெளிச்சேஷ்டைகளை நடாத்தும்சைதந்யத்தை அச்சேஷ்டைகளின் மூலமாய் அறிகிறார்

கள். வைத்ய சாஸ்திரமும் நூதனமான மார்க்கங்களிற் செல்ல ஆரம்பித்திருக்கின்றது. ஸ்தூல தேஹத்தில் ஏற்படும் வியாதிகளை நிவாரணம் செய்ய மருந்துகளை உட்கொள்வதே வழி என்ற பிராசீன கொள்கையானது வரவரக்கைவிடப்பட்டு வருகின்றது. சரீரத்திற்கு இயற்கையாயமைந்த சக்தியே, அதன் ஒழுங்குக்குப் பாதகம் செய்கின்ற வியாதிகளை நிவிர்த்திக்கத் தக்கதென்றும் அந்த நிவாரணத்திற்குத் தடையாக நிற்கும் பிரதிபந்தகங்களை அப்புறப்படுத்துதலே சிறந்த ஔஷதமென்றும் கைக்கொள்ளப் பட்டு வருகின்றது. "இயற்கைச் சிகித்ஸை" (Nature Cure) என்பது இதுவே. ஸுகாதார விதிகளை யநுஸரித்துத் தொத்து வியாதிகளைத் தொலைப்பதும் இவ்வழியைச் சார்ந்ததுதான். இவ்விதமாகப் பல வழிகளிலும் பழைய காலந் தொடங்கி ஸாதனங்களாக நின்ற முறைகள் மறைந்து புதுமுறைகள் தோன்றிவருகின்றன. இவ்விதமான மாறுதல்கள் கல்பங்களின் ஆதியிலும் அந்தத்திலும் தோன்றக் கூடியவைகள்.

***

ஒரு கல்பத்தின் முடிவும் மற்ற கல்பத்தின் ஆரம்பமும் ஜகத் குருவின் வரவை எதிர் நோக்குகின்றன. உப கல்பங்களின் ஸந்தியிலும் அவர் தோன்றுகின்றனர். தற்காலமும் ஓர் புதிய உபகல்பம் ஆரம்பிக்கும் காலமாகும். இக்காலங்களில் அவரது கருத்துக்கிசைந்த கைங்கர்யத்தைக் கைக்கொண்டு நிறைவேற்றுவதே நம்பெரும்பாக்கியம், தற்கால நிலைமையில் அதுவே முக்யமானது. அவருடைய வருகையை ஜனங்கள் அங்கீகாரம் செய்து அவரை வழிபடுவதற்கு நாம் என்ன செய்யவேண்டும்? அவர் வருகையை ஜனங்கள் அறிவதற்கு நாம் எவ்வாறு எங்கும் அதைப் பரவச் செய்யவேண்டும்? கிராமம், நகரம், மாகாணம்,

இராஜ்யம் இவைகளில் ஏற்படும் பல பிரவிர்த்திகளில் அவருடைய வருகைக்கும், அவருடைய கருத்துக்கும் ஒத்த பிரவிர்த்திகளை எவ்வாறு நாம் பலப்படுத்தலாம்? அவர் முற்காலத்தில் இத்தேசத்தில் ஸ்ரீகிருஷ்ண பகவானுய் அவதரித்தபொழுது, அவருடைய நாமமானது அதிசீக்கிரத்தில் இந்துதேச முழுமையும் பரவினதன்றோ! அவர் ஜனங்களுக்கு முன்தோன்றி, பால்யத்தில் ஸ்தூல சரீரத்தைத் துறந்து அவருடைய ஸ்தானத்திற்குச் சென்ற சில காலத்துக்குள் இத்தேசமெங்கும் பரவசமான பக்தியானது ஜனங்களுக்குள் பரவியதன்றோ!

***

அவர் வருங்கால் எத்தேசத்தார், எந்த ஜாதியோர், எம்மனிதர்கள், அவரை உண்மையிலறிந்து, அவரை வழிபடுகின்றார்களோ அவர்களுக்கே க்ஷேமம். அவரைத் திரஸ்கரிப்பவர்களுக்கு சிரேயஸ் கிடைப்பதரிது, அவர் முன் தோன்றின காலத்தில் அவர் உற்பவித்த ஜாதியாராகிய யூதர்கள் அவரைத் திரஸ்கரித்தார்கள். அதின் பயனை அச்சாதியாரின் பின் வரலாறே விளக்குகின்றது, அவர் தோன்றும் தருணமும் இப்பொழுது நிகழும் யுத்த நிர்த்தூளியானது அமர்ந்து, உலகத்தோர்களின் மனதானது பஹிர்முகத்தினின்று அந்தர் முகமாய்த் திரும்பி சாசுவதமான பதத்திற்கு வழியைக் காட்டும் அவரது இனிய உபதேசத்தைக் கிரஹிக்கத் தகுதியாயிருக்கும் காலமும் ஒன்றாயிருக்கும்.

***

அக்காலத்தில் நமது தேசமும் நமது தேசத்தில் வசிப்போர்களும் பூமண்டலத்தில் வியாப்தமாயிருக்கிற பிரிட்டிஷ் ராஜ்ய மண்டலத்தில் (British Empire) அம்மண்ட

லத்தின் மற்ற பகுதிகளைப்போல, அதற்கேற்ற ஸ்தானத்தை வகிக்கப் போகிறது போல் காண்கிறது. இந்தியா சட்ட நிருபண ஸபையில் கனம் முகம்மது ஷாபி என்பவர் இந்தியர் தேசத்தின் பிரதிநிதிகளும் பிரிட்டிஷ் ராஜ்ய மண்டலத்தின் விஷயங்களை யோசிப்பதற்காக சில வருஷங்கள்தோறும் கூடிவருகின்ற இம்பீரியல் கான்பரன்ஸ் என்ற சபையில் மற்ற குடியேறின நாடுகளுக் கொப்பந்தம் சேர்ந்து கூட ஏற்பாடு செய்யும் பொருட்டு இந்தியா கவரெண்மெண்டார் இந்தியா ராஜாங்க காரியதரிசி அவர்கள் மூலமாய் சக்கிரவர்த்தியின் மந்திரிகளைக் கேட்டுக் கொள்ளவேண்டுமென்ற விஷயத்தைப் பிரேரேபித்திருக்கின்றனர். இப்பிரேரேபணையால் ஓர் பெருத்த நற்பயன் சமீபத்தில் இத்தேசத்திற்கு உண்டாவதாக எதிர் பார்ப்பது முடிவு பெறுவிடினும் தற்கால சம்பவங்களின் கதியை குறிப்பிட்டுக் காட்டுகின்றது. அந்தப் பிரேரேபணை காலத்தில் அச்சட்ட நிருபண சபையின் மற்ற அங்கத்தினர்களாலும் மாட்சிமை தங்கிய கவர்னர்ஜெனரல் லார்ட் ஹார்டிஞ்ஜ் பிரபுவாலும் இந்த தேசத்தின் அபிவிருத்தியில் வைத்திருக்கும் விசுவாசத்தையும் அனுதாபத்தையும் காட்டக்கூடிய் அழகிய நோக்கங்கள் அடங்கிய உபந்யாஸங்கள் செய்யப்பட்டன. அவ்வித நோக்கங்கள் நிறைவேற்றப்படின் இச்சண்டைக்குப் பிறகு பிரிட்டிஷ் ராஜ்ய மண்டலத்தில் இந்தியாவால் வகிக்கப்படும் ஸ்தானம் கௌரவமுள்ளதாகவும் மற்ற பகுதிகளாகிய ஆஸ்திரேலியா, கன்னடா முதலிய குடியேறின நாடுகளுக்குச் சமமாகவும் ஆகுமென்று நினைக்கத் தக்கது. இதுவும் உலகத்தின் விகாஸமுறைக்கு ஏற்றதாகும்.

***

பெரும்பான்மையாக இந்தியர்களின் நடத்தையால் ஸ்ரீமான் C. W. லெட்பீடர் அவர்கள் இந்த தேசத்தில்

தங்கிய காலத்தில் அவருடைய அறிவினாலும் ஞானத்தினாலும் அவர் மூலமாய் அடையக்கூடிய பிரயோஜனத்தை அடையவில்லை. மகரிஷிகளின் ஸன்னிதானத்தை அடைந்தவர்கள் மூலமாய் கிரகிக்கக்கூடிய நற்பயனுக்கு வரம்பில்லை. அவர் சென்ற ஒரு வருஷத்திற்கு மேற்பட்ட காலமாய் ஆஸ்திரேலியா கண்டத்தில் மகரிஷிகளால் பிரசுரம் செய்யப்பட்ட குப்தவித்தையைப் பரவச்செய்து கொண்டு வருகின்றனர். அவரை அவ்விடத்திலுள்ளோர் உண்மையில் தெரிந்து கொண்டு நன்கு மதிக்கின்றனர். ஆஸ்திரேலியாவில் நூதனமான 5வது வகுப்பினராகிய ஆரியர்களுக்குள் ஆறாவது கிளை வகுப்பினருடைய ஒரு பகுதி தோன்றப் போகிறதென்றும் அதற்கேற்ப இப்போது என்ன ஏற்பாடுகள் செய்யத்தக்கன என்ற விஷயங்களைக் குறித்தும் உபந்நியாஸம் செய்து வருகின்றனர். 6வது உள் வகுப்பினர் அமெரிக்கா கண்டத்தில் இன்னும் 750 வருஷங்களுக்குள் தோன்றப் போகின்றனர் என்று ஸ்ரீமான் லெட்பீட்டர் அவர்கள் அவருடைய கிரந்தங்கள் மூலமாய் வெளியிட்டிருக்கின்றனர். ஆஸ்திரேலியாவும் அவர்களுக்குள் ஒரு கிளை ஜாதியாருக்குஇருப்பிடமாகஏற்படும்போல் தோன்றுகின்றது. அவர் செய்துவரும் உபந்நியாஸங்களின் விஷயங்கள், வருங்காலத்திற்கு ஏற்ப இக்காலத்தில் பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் அவர்கள் ஆளுகைக் குள்ளிருக்கும் குழந்தைகளுடைய ஸ்தூல சூக்ஷ்ம தேகங்களைப் பழக்குவதிலும் அவர்களுக்கு கல்வி கற்பிப்பதிலும் எம்முறைகளை அநுஷ்டிக்கவேண்டியது என்பதைப் பற்றியிருக்கின்றன. ஏனென்றால் இப்போது குழந்தைகளாயிருப்பவர்களே வருங்காலத்தில் பெரியோர்களாவார்கள்.

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

# மஹாத்மாக்களின் தொழில் *

மஹாத்மாக்கள் அவர்களுடைய உயர்தர பிரக்ஞா பூமிகளில் தொழிற்படும் முறையானது சாமானியர்க்குத் தெரியாதாயினும், அவர்கள் ஏராளமான தொழில்களை மேற்கொண்டவர்களென்றும் பெரிய உழைப்பாளிகளென்றும் இலகுவில் அறிதற்கு இடமிருக்கின்றது. ஸ்தூல சரீரத்தோடு உள்ள மஹான்கள் வெகு சிலரே உளராயினும் அவர்கள் வசமே இப்பூலோகத்தின் விகாஸ முறையானது ஒப்புவிக்கப் பட்டிருக்கிறது. அதிலும் மனுஷ்ய வர்க்கத்தின் விகாஸமுறையை அவர்கள் நடத்தும் விதமானது பின்வரும் உதாரணத்தால் நமக்கு நன்கு தெரிய வரும். பொதுவாய் ஒவ்வொரு மதமும் அதையதைச் சேர்ந்த கோஷ்டியினர்களை ஒருங்கே சேர்த்து நல்வழிப் படுத்தும்பொருட்டு பற்பல விடங்களில் பற்பல மடங்களை ஸ்தாபித்து இருக்கின்றதல்லவா? ஒவ்வொரு மடத்திற்கும் மடாதிபதி ஒருவரும் உண்டல்லவா? இதேமாதிரி இப்பூலோக முழுமையும் பல கண்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு கண்டத்திற்கும் அதிபதியாக ஒரு மஹான் உளர். அவரவர் தத்தமக்குஏற்பட்ட கண்டத்தின் விகாஸ முறையைக் கவனித்து வருவர். மேற்கூறிய பற்பல மடங்களையும் ஜனங்களுடைய நன்மையைக்கருதி ஊக்கமாய் உழைத்துவரத் தூண்டுவதன் மூலமாய் அந்தந்த மதமானது விசேஷமான பெருமையடையும்பொருட்டு சிற்சில சமயங்களில் பெரிய வித்வத் பரிஷத்துக்களையும் மஹா சமாஜங்களையும் ஏற்படுத்துவதுபோல, நமது பிரஹ்மக் ஞான சங்கமும் அதன் அதிகாரி புருஷர்களும் ஏதாவது ஒரு மதத்துக்குமட்டும் என்று இல்லாமல் மநுஷ்யவர்க்கம்

---

* ஆங்கிலத்தினின்று மொழி பெயர்க்கப்பட்டது.

முழுமைக்குமே உழைத்து வருகிறார்கள். மஹான்களுடைய சங்கத்தில், பிரஹ்மக்ஞான சபையைத்தவிர இன்னொரு வகுப்பும் உள்ளது. அஃதென்னவெனில், லோகத்தின் முக்கியஸ்தர்களான அரசர்களையும் மந்திரிகளையும் சமாதானத்தையே நாடச்செய்தும், ஆயிரக் கணக்கான ஜனத்திரள்களை ஒருங்கே சேர்த்து விசேஷ பாவங்களடங்கிய பிரசங்க மாரியால் மோகிக்கச்செய்யும் வாசாலகர்களின் மனங்களில் ஸர்வத்ர ஸமரஸமான தத்துவங்களை உதிக்கச்செய்தும், கலைஞர்களின் மனோபாவங்களையும் விருத்திபெறச்செய்தும், இவைகளின் மூலமாய் உலகமுழுமையும் ஏராளமான சுகிர்தம் பெறும்வண்ணமும் அவ்வகுப்பினர் உழைத்துவருகின்றனர்.

மஹான்கள் இத்தகைய தொழில்களைத் தம் சீஷர்களுக்கு ஒப்புவித்து, தாம், ஜீவர்களுடைய காரண சரீரங்களில் ஏற்படவேண்டிய அபிவிருத்திகளைக் கவனித்து வருகிறார்கள். ஸூர்ய கிரணங்களின் பிரவாகமானது புஷ்பங்களில் ஒளி வீசவீச, எவ்விதம் அவைகள் நவநவமான வர்ணங்கள் பொருந்திய அழகுகளையும், புதியபுதிய வாஸனைகளையும் நாளுக்குநாள் அதிகமாக அமையப்பெற்று, கடைமுறையில் பூர்ணமான விகாஸம் அடைந்து விளங்குகின்றனவோ, அவ்விதமே மஹான்களுடைய ஆத்ம விளக்கத்தின் பிரகாசத்தாலும், எல்லா ஜீவர்களும் உஜ்ஜீவிக்கிறார்கள். அநேகர் இத்தகைய உணர்வைச் சிற்சில சமயங்களில் அறிகின்றாராயினும், இதன் காரணஸ்தர்கள் மஹான்கள் என்பதை மட்டும் அறியாதவர்களா யிருக்கின்றனர்.

ஸாமான்யர்களுடைய காரண சரீரமானது, *சுத்த மனோ லோகத்தில் வெளிவிஷயங்களைக் கிரகிப்பதற்கேற்ற பூர்ண சக்தி வாய்ந்ததாக இன்னும் ஏற்படவில்லை. காரண சரீரமே இப்போதுதான் வளரும் பருவத்தில் இருக்கிறபடியால், அச்சரீரத்திற்குப் புறம்பேயுள்ள விஷயங்களைக் கிரஹிப்பது அதற்குக் கூடாத காரியமா யிருக்கிறது. முட்டைக்குள்ளிருக்கும் கோழிக்குஞ்சானது தான் வளருவதைமட்டும் உணர்கின்றதே யல்லாமல், வெளியினின்று முட்டையிற் தாக்கும் உஷ்ணத்தால் அது வளருகின்றது என்பதை அறியாது. ஆயினும் உண்மை யென்னவெனில், உஷ்ணமானது கோழிமுட்டையில் தாக்கத்தாக்க, குஞ்சானது வளர்ச்சிபெற்று வெளிக்கிளம்ப ஹேதுவாகின்றது. பக்ஷியானது முட்டையிலிருந்து வெளிக் கிளம்புவதற்கு ஒப்பாக, மநுஷ்யனும் எத்தருணத்தில் சுத்த மனோலோகத்தினின்று வரும் அலைகளைக் கிரஹிக்கும் மென்மையுடையவனாகிறானோ, அத்தருணம் முதற்கொண்டு அவனுடைய அபிவிருத்தியானது மேன்மேலும் சீக்கிரமாக நிகழ்கின்றது.

அசுத்த மனோசரீரங்கூட பூர்ணஅமைப்பு ஏற்படாமல் இப்போது தான் கருவாயிருக்கின்ற ஜீவர்களையும்† கூட, மஹான்களுடைய தேஜோமயமான சக்தியானது மானஸலோகம் முழுமையையும் வியாபிக்கக்கூடியதாகை

* மானஸலோகமானது சுத்தமநஸ் என்றும், அசுத்தமநஸ் என்றும் இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஸாமான்யர்களெல்லோரும் பூலோகம், காமலோகம், அசுத்தமனோலோகம் என்ற மூவுலகங்களிலேயே சஞ்சரிப்பதும், திரும்ப பூலோகத்தில் ஜன்மம் எடுப்பதுமாக பலமுறை ஜன்மங்களெடுத்துத் தேர்ந்த அநுபவம் பெற்றபேல் முக்தி யடைந்து கீழான மூன்று லோகங்களையும் துறந்து மஹான்களாகி சுத்தமனோலோகம் புத்திதத்துவலோகம் ஆத்மிகலோகம் ஆகமூன்று மேலுலகங்களிலும் ஸஞ்சரிப்பர்.

152



யால், விரைவில் விருத்தியடையச் செய்கின்றது. அஃதெப்படியெனில், சூர்ய கிரணங்கள்போல அவர்களுடைய சக்தியானது, மாநஸலோகம் முழுமையும் வியாபித்து அதன் எல்லைக்குட்பட்ட அனைத்தையும் சலிக்கச் செய்கின்றது. மஹான்கள் மிகுந்த நற்பயன்களை விளைக்கும்பொருட்டு, புண்யகாலங்களிலும், புண்ய க்ஷேத்ரங்களிலுமே தம் அருட் சக்தியின் பிரவாஹத்தை விசேஷமாய் வர்ஷிப்பர். புண்ய க்ஷேத்ரங்களிற் சில, மஹான்களுடைய அருட் சக்தி நிறைந்த யந்த்ர ஸ்தாபநங்களால் ஏற்பட்டிருக்கலாம்; அல்லது பெரியார் எவரேனும் வஸித்து ஸித்தியடைந்த ஸ்தலங்களாயிருக்கலாம்; அல்லது அத்தகைய பெரியாருடைய சின்னங்கள் பல இருந்து அத்புத சக்தி விசேஷங்களை வெளியிட்டுக் கொண்டிருக்கலாம். ஏற்கனவே இத்தகைய பரிசுத்தமான ஸூக்ஷ்ம சக்திகளால், வியாபிக்கப்பட்டுப் புனிதமான க்ஷேத்ரங்களிலேயே, தாமும் சேர்ந்து பன்மடங்கான நற்பயன்களை விளைத்தற்பொருட்டு, பிரஸந்நர்களாயிருப்பர். தவிரவும் ஏராளமான ஜனங்கள் பக்திமான்களாகத் தீர்த்த யாத்திரை சென்று ஒருங்கேகூடி, ஈசனையவர்கள் வழிபடும் துறையிலேயே, தாமும் எழுந்தருளி அநுக்ரஹிப்பதும் இம்மஹான்களுடைய வழக்கம்.

மேலுலக வாஸிகளாகிய மஹான்களுடைய இத்தகைய உதவியால் தான் நாம் இப்போதிருக்கும் தற்கால

† இந்த ஜீவர்கள் ஒவ்வொருவருக்கும் பற்பலமிருகசரீரங்கள் உண்டு. இந்த ஜீவர்களுக்கும் மநுஷ்ய சரீரத்தில் ஆவேசித்திருக்கும் ஜீவர்களுக்கும் அதிக வித்யாசமுண்டு. முன்னவர்கள் விகாச முறையில் தாழ்ந்தவர்கள். பின்னவர்கள் விகாசமுறையில் ஒருபடி அதிகமாயேறியவர்கள். மநுஷ்யசரீரம் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஜீவன் உண்டு. மிருக வர்க்கத்தில் ஒரே ஜீவன் பற்பல மிருகங்களை ஆவேசித்துக் கொண்டிருக்கிறான்.

153



ஸ்திதிக்கு அபிவிருத்தியடைந்து வந்திருக்கிறோம். நாம் இப்போது ஐந்தாவது மஹாகல்பத்தில்,§நான்காவது கல்பத்தின்‡ மத்தியிலிருக்கிறோம். இக்காலத்தில், ஸ்வபாவகதியில் நாம் நமது காமநாசரீரங்களைச் சுத்திசெய்து காமநாலோகத்தில் அல்லது புவர்லோகத்தில் பூர்ணமாய் வியவஹரிக்கக்கூடிய சக்தியைப் பெற்றாலுமே போதுமானதாயிருக்க, ஐந்தாவது கல்பத்தில் நாம் பெறவேண்டிய ஸித்தியாகிய மனோலோக வியவஹாரத்தை இப்போதே ஆரம்பித்துவிட்டோம். இது எவ்விதம் ஸாத்தியமாயிற்றெனில், சுக்ரகிரஹத்தினின்று நமது கிரஹத்தின் விகாஸமுறையைச் சீக்கிரப் படுத்தும்பொருட்டு குமாரர்கள் நமது பூலோகத்திற்கு வந்தார்கள்; அவர்கள் உதவியாலும், மற்ற மஹான்களின் உதவியாலுந் தான் நாம் இவ்வபிவிருத்தியடையச் சாத்தியமாயிற்று. நாம் இவ்விதம் அபிவிருத்தியடையும்பொருட்டு, அம்மஹான்கள் தம்தேஜோமயமான சக்தியை எப்போதும் தியாகஞ்செய்து வருகிறார்கள்.

மஹான்களுடைய தொழிலைப்பற்றிக் கொஞ்சமேனும் அறிந்த எவருக்கும், முக்யமாய் மஹான்கள் செய்துவரும் வேலையை எமது பாக்கியவசத்தால் நாங்கள் பார்த்தமட்டில், அவர்களிடம் ஸ்வயநலத்தை உத்தேசித்து யாதொன்றையும் வேண்டுவதற்கு மநம் துணியாது. அவர்கள் செய்துவருகின்ற மஹோபகாரமான உழைப்பெங்கே! அவர்கள் உலக விகாஸமுறைக்கு உழைக்கும் காம்பீர்யமும், பெருமபோக்கும், அவர்கள் அத்தகைய பிரவிர்த்தியைக் கைகொள்ளும் முக்யதையும், நம் போலியர் ஒவ்வொருவருடைய க்ஷேமலபங்களையும் தனித்தனியாக அவர்கள்

§ மஹாகல்பம் - Planetary Chain.

‡ கல்பம் - Round.

கவனிக்க முடியாதென்பதை, நன்கு விளக்குகின்றன. மஹாத்மாக்கள் ஜீவர்களுடன் பிரத்யேகமான ஸம்பந்தம் வைத்துக்கொள்வதற்குத் தம் சிஷ்யர்களேயும், இதரதேவதைகள் சிலரையும் ஆக்ஞாபிக்கின்றனர். ஆகையால் நம்மவர்கடமை என்னவெனில், ஸாமாந்யமான மேற்கூறிய உதவியை மற்றையோருக்குச் செய்துவரும்படி சக்தர்களாகவும், யோக்யர்களாகவும் பயின்று வரவேண்டியதேயாகும். இதன் மூலமாய், மஹான்கள் நேரே கவனிக்க இயலாத வேலையைத் தற்காலத்தில் நாம் முடிப்பதற்கேற்ற கருவிகளாகலாம். மஹான்களோ அவர்களுடைய அபாரமான பிரயத்நங்களை விட்டுச் சற்றும் சில்லரை வேலைகளைக் கவனிக்க அவகாசமில்லாதவர்கள். பூலோகத்திலிறந்துபுவர்லோகத்தில் வந்து மதிமயங்கித் தத்தளிக்கும பலரை, நம்மவர்கள் தூங்கும்போது புவர்லோகத்தினின்று தேற்றலாம். நாம் அவ்விதம் செய்ய முயலாவிடில், புவர்லோகத்தில் இவ்வித உபகாரம் நிகழமுடியாதன்றோ! நாம் எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரம் இவ்வேலைகளை யெல்லாம் செய்யப் பழகி வருகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு சீக்கிரம் அதிமேன்மையான வேலைகளையெல்லாம் செய்வதற்குச் சிஷ்யர்களாக அங்கீகரிக்கப் பெறுவோம்.

மஹாத்மாக்கள், நம் போலியரான அற்பமான கருவிகளைக்கொண்டும் தொழிற் படுவானேன்? என்று பலர் கேட்கிறார்கள். அவர்களே எல்லா வேலையையும் செய்து முடிப்பதென்றால் ஸாவகாசம் போதாது. அதனால், செய்த மட்டில் சிலாக்யம் என்று கருதி, தம்மிடத்து அகப்பட்ட கருவிகளைக்கொண்டு, வேலைகளை முடிக்கின்றனர். இல்லாவிடிலோ, வேலைகள் செய்யப்படாமலே இருக்கின்றன. உதாரணமாக, ஜகதுபகாரார்த்தம் ஸத்கிரந்தங்களை

அருளிச் செய்யவேண்டியது ஒருவேலை. இவ்வேலையை மஹான்கள் தம் சிஷ்யர்களைக் காட்டிலும் எவ்வளவோ மேன்மையாய்த்தான் செய்வார்கள். எவ்வித அற்பப்பிழையும் நேரிடா வண்ணம் செய்வார்கள். இவ்வித வேலைகளுக்கு சாவகாசமே யவர்கட்குக் கிடைப்பதரிதாகையால், அவர்கள் சிஷ்யர்களின் மூலமாகவும் செய்யப்படாவிடில், ஒருபோதும் செய்ய முடியாது. தவிரவும், மஹான்களே எவ்வற்ப வேலையையும் செய்து வருவார்களேயானால், அவர்களைக் காட்டிலும் இளைஞர்களான சிஷ்யர்கள் செய்யக்கூடிய ஸத்கர்மாவைப் பறித்துப் போகிறவர்களாவர். சிஷ்யர்கள் மஹான்களைப்போல அவ்வளவு நன்றாய்ச் செய்ய இயலாவிடினும், தம்மினும் எத்தனையோ படிகளில் தாழ்ந்த மநுஷ்ய கோடிகளுக்கு எண்ணிறந்த நன்மையை விளைப்பதற்குப் போதிய சக்தியுடையவர்கள்.

ஒவ்வொரு மஹானுக்கும், ஏராளமான சக்தியுள்ளபோதிலும், அது நமக்கு அளவிறந்ததெனத் தோன்றியபோதிலும், அவர்களுடைய பிரக்ஞைக்கு அளவுக்குட்பட்டதாகையால், லோகஸம்ரக்ஷணார்த்தம் தம் சக்தியை எவ்வளவு உபயோகமாய்ச் செலவிடக்கூடுமோ, அவ்விதந் தான் அவர்கள் செய்வார்கள். ஆகையால் அவர்கள் தம் சக்தியைக்கொண்டு எத்தகைய உயர்ந்த பிரயோஜனத்தை விளைக்கக்கூடுமோ, அதற்கு அந்யதாவாகச் செய்வது உண்மையில், தகாத காரியமென்று கூடச் சொல்லலாம்: அவர்களிடம் பக்திக் குறைவினால் இவ்விதம் சொல்லுகின்றவனல்லன். உண்மையில், அவர்கள் எல்லோருடைய பொது க்ஷேமத்திற்கு மாகச் செலவிடக்கூடிய அத்புத சக்தியை, தனித்தனியான ஜீவர்களைக் கவனிப்பதில் செலவிடார்கள் என்றே நாம் அறியற்பாலர்.

C. W. லெட்பீடர்.

156

# ஆயுளின்
# "முக்கியமான கருத்து"*

ஓர் தகப்பனும் அவன் மகனும் ஓர் பாதையோரத்தி லுட்கார்ந்துகொண்டு அப்பக்கம் பல் வேறு நோக்கத்துடன் சென்றுகொண்டிருக்கும் புருஷர்களையும், ஸ்திரீகளையும், குழந்தைகளையும், உற்று நோக்கிக்கொண்டிருந்தனர். அப்போது திடீரென மகன் தன் தந்தையை நோக்கி, "ஐயனே! இப்பிறப்பின் முக்கியமான கருத்தேன்னை" எனக் கேட்கலானான். அதற்குப் பிதா மறுமொழி கூறுகிறார். மைந்தா, இக்கேள்வியை எக்காலத்திலுள்ளோருமே கேட்டிருக்கின்றார்கள். அது மகாமுக்கியமானதும், கடினமுமான கேள்வி. எளிதில் அதற்கு விடை தரமுடியாது.

உலகிற் பெரும்பாலர் சரீரசுகத்தையும் விஷய அநுபவங்களையும் தங்கள் விச்சிராந்தியையுமே நாடுகின்றார்கள். ஆயினும், வேறு சிலர் இவற்றிற்கும் மேலான மனச்சந்துஷ்டியும், உத்தம நண்பர்களின் அன்பும், புண்ணியத்தின் பயனுமே பெரிதெனக்கருதி அவற்றைத் தேடுகின்றார்கள். அதனினும் மேலானது பிறரின் நன்மையைத் தேடுவது எனத் தெரிந்து அதை நாடி மற்றும் சிலர் உழைக்கின்றார்கள். லோகோபகாரத்தினால் ஈசனது மகிமையைத் தெரிவித்தலே அவர்கள் தொழில். இஃதே இப்பிறப்பின் முக்கியமான கருத்தாம்.

தனயன்:—அத்தகை வாழ்க்கையில் என்ன சந்தோஷமிருக்கின்றது? எனக்கு அதில் யாதொரு மகிழ்ச்சியுமிருப்பதாய்த் தெரியவில்லையே.

தந்தை:—அப்படியல்ல, குழந்தாய்! பிறர்க் குழைப்பதில் அதிவுயர்வான ஆனந்தமுண்டு. ஆனால், சாமான்ய

* Adapted from Re-incarnation.

ஜனங்கள் அச்சந்தோஷத்தை (யறிந்து) அநுபவிக்க முடியாது.

தனயன்:—அவ்வாறு எக்காலமும் எவர்கட்கும் உதவி புரிவதில் அவர்கள் சலிப்புறுகின்றதில்லையா? அப்பா?

தந்தை:--அவர்கட்குச் சற்றேனும் சலிப்புண்டாகாது. இச்சன்மம் எடுத்ததின் கருத்தை யறிந்தவர்கட்குச் சோம்பலுங்களைப்பும் எவ்வாறுண்டாகும்? அப்பெரியோர்கள் மன அமைதி பெற்றவர்களன்றோ?

தனயன்:—அவ்விதமாய் வாழ்தலால் அவர்க்ட்குக் கிடைக்கும் லாபமென்ன?

தந்தை:—அவர்களது தியாகபலமே அவர்களது லாபம்! ஆனல் நம்போலியர்கட்கு அஃது விளங்காது. சாமானிய ஜனங்கள் விரும்பும் விஷயங்கள் யாவையும் மெய் வாழ்வுடையோன் துறக்கின்றான்: தியாகமே அவனது ஐசுவரியம். அவன் தன்னைப் போலவே மற்றவர்களும் ஞானத்தைப் பெறுமாறு அவர்கள்பால் கைங்கரியம் புரிகின்றான்.

தனயன்:—அத்தகைய புத்தி யாவர்க்குமே வரக் கூடியதா?

தந்தை:—ஒரே ஜன்மத்தில் திடீரெனப் பூர்ணமாய் வராது. ஆயினும், ஈசன் சர்வ சக்திமானனதாலும், நாமெல்லோரும் ஈசனது அம்சத்தைப் பெற்றவர்களானதாலும், பல ஜன்மங்களினிறுதியில், நாம் பூர்ண ஞானத்தை யடைவோம். இங்கு நாம் கற்கவேண்டிய விஷயங்கள் பலவிருக்கின்றன. ஆதலால் நாம் உலகு என்ற பள்ளியிற் பலதினமுஞ்சென்று கற்கின்றோம். நமது ஒவ்வோர் ஜன்மமும் ஆன்மாவின் அகண்ட வாழ்க்கையில் ஓர் தினமென்று கூறலாம்.

தனயன்:—அப்படியானல் இந்த ஜன்மமும், நான் படித்து வந்திருக்கும் பல நாட்களில் ஒரு நாளா?

தந்தை:—ஆம் அப்பா; "இப்பிறப்பின் முக்கியமான கருத்து என்ன" என்று நீ விசாரிக்கப்புகுந்ததே பல தினம் நீ இப்புவியெனும் பள்ளியில் படித்து வந்திருக்கின்ருயெனக் காட்டுகின்றதே.

விஷய சுகங்களில் உழன்று திரியும் ஜனங்களே இப்பள்ளியின்கணுள்ள சிறு குழந்தைகள்—பாலர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். தர்மவழியிற் சென்று நியாயமான காரியங்களைச் செய்ய யத்தனித்தவர்களே சற்று மூத்த குழந்தைகள்; இவர்கள் மத்திய வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஆனல் உன்னைப்போல் இப்பிறப்பின் அந்தரங்கக் கருத்தையறிய விரும்புவோர்களே பருவம் வந்த ஆன்மாக்கள். இவர்கள் உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள், ஏனெனில் ஒருவன் மெய்யாய் ஆன்மவிசாரணை செய்யவேண்டுமென்ருல், அவனுக்கு உள்ளப்பற்று நீங்கியிருத்தல்வேண்டும். தகுந்த பக்குவம் வந்தவர்களே உண்மையைத் தேடுவார்கள்.

தனயன்:—அவ்வாருயின், அப்பா இச்சன்மம் போனபோதிலும் நான் திரும்பவும் ஜனித்து மென்மேலும் ஞானத்தையடைவேனு?

தந்தை:—அதற்கென்ன சந்தேகம்? மைந்தா! ஞானமென்பது ஓர் பெரும் சாகரம். அதன் ஆழத்தை நாம் கண்டறிய முடியாதாயினும், மனிதன் தகைமை எப்பொழுதும் அதைநாடிச் செல்வதே, அவன் தனது பூர்ணபரிபாகத்தால் தெய்வமாகுங் காலத்திலுங்கூட அதைத் தேடியே செல்வான்.

தனயன்:—ஆனல் உலகிற் பல தேவகணங்களிருக்கின்ருர்களா? அப்பா?

தந்தை:-ஆம் என் கண்ணே! இவ்வுலகிற் தாதுவர்க்கம், தாவரவர்க்கம், பிராணிவர்க்கம், மானிடவர்க்கமெனப் பல வர்க்கங்களிருப்பன போலவே, தேவவர்க்கமொன்று பிரத்தியேகமாயிருக்கின்றது. மனிதன் பூர்ணபரிபாகம் பெறுங்கால் அவன் தேவகணத்தோடு சேருகின்றான்—தேவகணமாகின்றான். ஆனல் அவர்களையடைய வேண்டியதற்கு ஏற்பட்ட மார்க்கத்தில் பல ஜன்மங்கள் நடக்கவேண்டும். இஃது முக்திமார்க்கம் அல்லது ஞானமார்க்கமெனக் கூறப்படும். அம்மார்க்கத்திற் செல்பவனது குறி (அடையாளம்) அளவிறந்த ஆத்ம பரித்தியாகம் அல்லது பரகைங்கரியமென்பதே, அதிற் செல்வது மிகவும் கஷ்டசாத்தியமானது. ஆயினும், எல்லா ஆன்மாக்களும் பிற்காலத்திற் செல்லவேண்டிய மார்க்கமதுவே. அதிற் பிரயாணஞ் செய்பவர்கட்குதவும் பொருட்டு தேவர்களே மானிட வடிவெடுத்து அவர்களுடன் கூடச் செல்கின்றனர்,

தனயன்:—அப்படியாயின், நீங்களும் நானும் அம்மார்க்கத்திற் பிரவேசித்திருக்கின்றோமா, ஐயா?

தந்தை:—ஆம் அப்பா, நாமிருவரும் அம்மார்க்கத்தில் பிரவேசித்துவிட்டோம். அது மாத்திரமா? பெரியோர்களே, அதாவது தேவர்களே மனிதவுருவெடுத்து நமக்கு உதவி புரிந்தார்கள். நான் அதை யறிந்துகொண்டேன். அவர்கள் அதைக் கண்டு களித்தார்கள்.

மைந்தன்:—மெய்தான், எல்லோருமே அம்மார்க்கத்திற் பிரவேசித்தால் எவ்வளவு ஆனந்தமாயிருக்கும், ஐயா!

தந்தை:—அதைப்பற்றி உனக்கு பயம் வேண்டாம். எல்லோருமே அம்மார்க்கத்திற் பிரவேசிப்பார்கள். ஈசனது பரம கருணை ஒரு ஆன்மாவையாவது அம்மார்க்கத்தி

னின்றும் நழுவும்படி விடாது. பலஜன்மங்களான போதி லும் கடைசியாய் எல்லோருமே ஈசனையடைவார்கள்.

தனயன்:—ஆனால், இந்த ஜன்மம் நீங்கி நான் திரும்பவும் ஜனிக்கும்பொழுதுகூட இந்த ஞானமார்க்கத்திலேயிருப்பேனா?

தந்தை:—ஆம் குழந்தாய்! அம்மார்க்கத்தில் ஒருவன் பிரவேசித்துவிட்டால், அவன், பிறகு யாது நேரிடினும், வழி தெரியாமற் போகான்.

தனயன்:—அவ்வாறாயின், எந்நிலைமையிலுள்ள மனிதனும் ஈசனிடம் சேர்ப்பிக்கும் அந்த ஞானமார்க்கத்திற் செல்லலாமல்லவா?

தந்தை:—அதற்குத் தடையென்ன? ஒருவனிடம் எத்துணை குறைவுகளும் பாதகங்களும் இருப்பினும், அவற்றிற்கெல்லாம் அவன் ஈடுசெய்து, பின்பு ஞானமார்க்கத்திற் சென்று ஈசனையவன் அடையவேண்டியவனே. ஞானமார்க்கத்திற் பிரயாணஞ் செய்பவர்கள் எவ்வுயிர்க்கும் இடைவிடாது உபகாரஞ் செய்துவருவார்கள். அவர்கள் செடிகொடிகளிடத்துங்கூடப் பிரீதியாயிருப்பார்கள். ஏனெனில், ஈசன் பலவுயிர்களாகப் பரிணமித்திருப்பதால் எவ்வுயிரிடத்தும் அவர்கள் ஈசனையே தரிசித்து சேவை புரிகின்றார்கள். இவ்விதம் பக்தியாலும், ஆன்மவிசாரத்தாலும் சேவை விசாரணையாலும் கைங்கரியம் அல்லது ஊழியத்தாலும் எம்மனிதனும் ஸ்திரீயும், குழந்தையும் பரமனையடையும் பாதையிற் செல்லலாகும். உனக்கும் அப்பெரும்பேறு சித்திப்பதாக, (மைந்தா,)

R. பஞ்சாபகேசன்.

## உதயதிசை நக்ஷத்ர ஸங்கம்.

ஒரு மஹாபுருஷரான ஞாநாசாரியர் அதிசமீப காலத்தில், இவ்வுலகில் தோன்றுவார் என்ற நம்பிக்கையானது வெகு தீவிரமாய் தற்காலத்தில் இப்பூலோகத்தின் பற்பல பாகங்களிலுமுள்ள ஜனங்களுக்குள் பாவிவருகின்றது. அதன் பயனாக இச்சங்கம் ஏற்பட்டுள்ளது. தற்கால முக்கிய மதங்களெல்லாவற்றிலும், அதாவது அவைகளைத்தழுவியிருக்கும் வெவ்வேறு ஜாதியர்களுக்குள்ளும் இத்தகைய மகாகுருவை அநேகர் எதிர்பார்க்கின்றனர். ஒவ்வொரு மதஸ்தரும் ஸஹஜமாகவே, தத்தம் மதகிரந்தங்கள் கூறுகின்றவாறும், தத்தம் தேசபாஷைக்குத் தக்கவாறும், வெவ்வேறு விதங்களாக இக்கொள்கையை வெளியிடுகின்றனர்

இச்சங்கத்தின் நோக்கமென்னவெனில், இன்ன இடத்தில் இன்னரூபமாக மஹான் தோன்றுவார் என்று பற்பலர் பலபலவிதமாக எண்ணியபோதிலும், பெரியார் ஒருவரின் நல்வரவை எதிர்பார்ப்பதையே பொது நோக்கமாகக் கொண்ட அனைவர்களையும் கூடியமட்டில் ஒருங்கே சேர்க்க முயல்வதும், அதன்மூலமாக வருங்காலத்தில் தோன்றும், பரமாசார்யரை நல்வரவேற்கும் ஒருபெரிய மகாசங்கமாக்க முயல்வதுமேயாகும்.

கலியுகத்திற்கு மைத்திரேய மஹரிஷியே ஞாநாசாரியர் என்றும், பராசரர் மைத்திரேயருக்கு பிரஹ்மவித்தையை உபதேசித்து, அதைக் கலியுக அந்தத்தில் ஸௌநகமுனிக்கு உபதேசிக்கும்படி ஆக்ஞாபித்தாரென்றும், விஷ்ணுபாகவதம் விஷ்ணுபுராணம் இவைகள் கூறுகின்றன. (ஸ்ரீமத் பாகவதம் 3-வது ஸ்கந்தம் 4-வது அத்தியாயம் 25-வது சுலோகத்தைப் பார்க்க.)

"துவாபரயுக முடிவில், இந்த அநித்திய பூவுலகை விட்டு நீங்கும்பொழுது, ஸ்ரீகிருஷ்ணபகவான் உத்தவரை யழைத்து அருகில் வைத்துக்கொண்டு, மைத்திரேயர் என்ற பெயர் விளங்கிய கௌஷாரவரிஷியை வணங்கித் தொண்டு செய்து, அவரிடம் ஞானோபதேசம் பெற்றுக் கொள்ளும் படி விதரனுக்குக் கூறவேண்டும்" எனக் கட்டளையிட்டுச் சென்றனர். (ஸ்ரீவிஷ்ணுபுராணம் 6-வது ஸ்கந்தம் 8-வது அத்தியாயம் பார்க்க.)

பிரஹ்மாவானவர் இந்த ஆர்ஷமான (ரிஷிகளுடைய) வித்தையை, முற்காலத்தில் ரிபுவுக்கு உபதேசித்தார். ரிபுவினிடமிருந்து ரிஷி பரம்பரைக் கிரமமாக புலஸ்தியருக்கு கிடைத்தது. அவர் பராசருக்குச் சொன்னார். பிறகு பராசரர் மைத்திரேயருக்கு உபதேசித்துக் கலியுக அந்தத்தில் ஷினீகருக்கு உபதேசிக்கும்படிக்கும் ஆக்ஞாபித்தார். மேற்கூறிய பிரமாணங்களால் மைத்திரேய மஹரிஷியே, இக்கலியுகத்தில் லோகமுழுமையும் ஞானத்தை அளிப்பதற்கு ஏற்பட்ட ரிஷியென்றும், பிறகு சினீகருக்கு அத்தொழிலை ஏற்படுத்துவாரென்றும் அறிகிறோம். ஸ்ரீமத் பாகவதத்தின் பிரகாரமும், உலகத்திற்குற்ற பிரஹ்மவித்தையை பிரசித்தப்படுத்துவதையே கைங்கரியமாக மேற்கொண்ட மகரிஷிகளுக்குள் பராசருக்குப் பிறகு மைத்திரேயரே தோன்றுவார் என்பது நிரூபிக்கப்படுகிறது.

தற்காலமே அம்மஹரிஷி வருவதற்கேற்ற காலமாயிருக்கிறது. முற்காலங்களிற்போல ஒருஜாதியாருக்கென்றுவது, ஒரு குறித்த தேசத்தினருக்கென்றுவது அல்லது ஒரு குறித்த வகுப்பினர்க்கென்றுவது தோன்றுமல் உலகமுழுமைக்கும் ஒரே குருவாகத் தோன்றுவர்.

* வரப்போகும் ஆசார்யர் ஒரு அவதாரம் என்று சொல்ல இயலாதாயினும் மநுஷ்யவர்க்கத்தில் ஒரு புதிய உள்வகுப்பினர் உலகில் தோன்றுங் காலத்து உதிக்கும் ஒரு மஹாபுருஷராவர். அவதார புருஷரென்பவர் ஒரு கல்ப முடிவில் வருகின்றவர். ஜகத்குருவோ ஒருபுதிய உள்வகுப்பினர் (Sub Race)உலகில் விருத்தியடைய ஆரம்பிக்கும் சமயத்தில் தோன்றுவர். ஆயினும் கல்பாந்தங்களிலும்,உபகல்பாந்தங்களிலும்ஒரேவிதமானசம்பவங்கள்நிகழ்கின்றன.

இந்த ஜகத்குருவானவர் தம் ஸ்தானத்தை வஹிக்கு முன்னர் நாம் புத்தர் என்று சொல்லும் கௌதமரே இந்த பதவியிலிருந்தனர். புத்தர் அதாவது ஞானமூர்த்தி என்று அவரைச் சொல்வதுண்டு. இனி வரவேண்டியவர் மைத்ரேயர் எனப்படுவர். மைத்ரேயர் என்பதற்கு கருணாமூர்த்தி என்றர்த்தம். முன்னவர்க்கு ஞானமூர்த்தி யென்றும், பின்னவர்க்கு கருணாமூர்த்தி யென்றும் பெயர்.

---

* பின் வருவன, அநேகர் இது விஷயமாய் வினவும் வினக்களுக்கு பிரஹ்மக்ஞான தர்சனம் அளிக்கக்கூடிய விடைகளாகும். ஆனால் ஸ்ரீபெஸண்டு அம்மையாரோ அல்லது வேறெந்த பிரஹ்மக்ஞானியோ நம்பும் எவ்விஷயத்தையும் இச்சங்கத்தின் மெம்பர்கள் நம்பவேண்டு மென்பது ஒருபோதும் கட்டாயமாகாது. இச்சங்கத்தின் நோக்கம், திருவருள்பெற்ற பெரியார் ஒருவர் சமீபகாலத்தில் தோன்றுவாராகையால் இவ்வுலகமானது அவரை அறிந்து நல்வரவேற்கும் தகைமையைப் பெறும்படியாகப் புனிதப்படுத்துமாறு முயல்வதற்கேயாகும். ஈசுவராக்ஞையை மேற்கொண்டு வரும் பரமஸ்ரப்பற்றி இதன் அங்கத்தினர் அவரவர் சிலாக்கியமாகக் கொள்ளும் அபிப்பிராயம் அவரவர்க்கு அங்கீகாரமாயினும், அது மற்றையோர்களை எவ்விதத்திலும் ஸம்பந்திக்காது, இச்சங்கம், குறித்த எவரையும் நம்பு என்று சொல்வதேயில்லை. பாரபக்ஷமான புத்தியும் துரபிமானமும் நீங்கியவர்களாய் எதையும் நிதானித்துக் கேட்டுப் பிறகு தீர்மானிக்கும்படி மட்டும் வேண்டுகிறது. அநேகர், ஒரு குறித்த சரீரத்தின் மூலமாய்த் தான் அவர் வருவார் என்று நம்புவது, அவரவர் நம்பிக்கையைப் பொருத்ததேயொழிய, இச்சங்கத்தில் சேர்ந்த மாத்திரம் மேற்கூறிய விதமே நம்பவேண்டு மென்பது கட்டாயமில்லை. ஒவ்வொரு அங்கத்தினரும் தத்தம் வழிகளிலே நாடுவதுபோல் பிறரையும் அவரவர் வழிகளில் நாடுவதைத் தடுக்காமலிருக்கவேண்டுகின்றது.

மைத்ரேயர் இதற்குமுன் இரண்டுதரம் இவ்வுலகிற் ரோன்றியிருக்கிறார். இந்தியாவில் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியாகவும், பலஸ்டைன் தேசத்தில் கிறிஸ்துவாகவும் தோன்றியிருக்கிறார். கிருஷ்ணாவதாரத்தின் முக்ய அம்சம் அன்பே என்பதையும் பலர் நன்கு அறிவர். அவ்வன்பின் பெருமையையும், பாலகிருஷ்ணனுடைய லீலாமிருதத்தால் உளங் களிக்காதவர் எவர்தான், என்பதையும் சற்று நினைத்துப் பாருங்கள்.

அவர் தோன்றும் விதம் எப்படியெனில், இவ்வுலகில் தம்முடைய உபயோகத்திற்காக, ஓர் சரீரத்தைத் தேர்ந்தெடுத்து, அதை நேர்மையான கருவியாக்கிக் கொண்டு, அதனாலேயே இந்த ஸ்தூலவுலகில் தாம் நிறைவேற்ற வேண்டிய கார்யங்களைச் செய்து முடிக்கின்றனர். கார்யம் முடிந்தவுடன் இச்சரீரத்தை விட்டுத் தம் தேஜோமயமான சரீரத்தையே திரும்ப அடைகின்றனர். திரும்பஇன்னொருதரம் மநுஷ்யர்களுக்குள் அவதாரம் செய்ய நேரும் வரை அதிலேயே இருக்கின்றனர்.

இப்பூலோகத்தில், அவதாரகாலத்தில் அவரது உபயோகத்திற்கென்று, முன்னரே ஒரு சிஷ்யன், தன் சரீரத்தைப் புனிதப்படுத்திய பிறகு, அவர் அச்சரீரத்தை உபயோகிக்க ஆரம்பிப்பார். அநேக விவரங்களில் அச்சரீரம் மிகப் புனிதம் பெற்றதாயும், பூர்ண பரிபக்குவ மடைந்ததாயு மிருத்தல் வேண்டும். ஆனால் ஒவ்வொரு ஜகத்குருவும் முதன்முதல் பூலோகத்தில் பிறக்கும்போது, குழந்தையாகப் பிறந்தே தீரவேண்டுமாகையால், முதலில் பாலகிருஷ்ணனாகப் பிறந்தார்.

ஹிந்துக்கள் ஜகத்குருவென்றும், அதாவது உலகமுழுமைக்குமே ஓர் ஞாநாசாரியரென்றும், புத்தர்கள் "ஞானமூர்த்தி" என்றுபொருள்படுகின்ற'போதிஸத்வர்' என்றும்,

165



கிறிஸ்தவர்கள் "ஈசுவரனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்று பொருள்தரும் கிறிஸ்து என்றும் கூறுகின்ற பரமாசாரியரின்வருகைக்கு ஸூசகமான புதியபல அறிகுறிகளைப் பற்றி நீங்கள் அடிக்கடி கேள்வியுற்றிருக்கலாம். ஒரு மனிதனை ஒரு மதத்தைவிட்டு இன்னொரு மதத்திற்குப் பெயர்த்தலே அநாவசியம்.

ஒவ்வொரு மதத்தின் பிரகாரமும், வந்தனை வழிபாடு செய்வோர்க்கு, அருள் அல்லது கிருபை ஏற்படும். நாநா மதங்களிலுமுள்ள பக்தர்களை அநுக்ரஹிக்கும் மூர்த்தி ஒருவரே. கருணையங்கடலாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவான், "யார்யார் எந்தெந்த ரூபத்தை உபாஸித்தாலும், எல்லோரும் என்னையே உபாஸிக்கிறார்கள்" என்று கூறியிருக்கின்றனர். இது மிக ஆழ்ந்த தத்துவம். ஓரே ஜகத்குருதான் உளர். அவரை எப்பெயரால் அழைப்பினும் எக்குணங்களை அவர்பால் கல்பித்தாலும், ஒருவரே பற்பலவிதமாய் உபாஸிக்கப்படுகிறார் என்பது கவனிக்கத்தக்கது. ஓரே கடவுள்தான், ஓரே ஜகத்குருதான். அவரை நோக்கியே லோகத்தின் ஸகலமதங்களும் பிரவிர்த்திக்கின்றன. ஸ்ரீ கிருஷ்ணன் என்றாலென்ன, போதிஸத்வர் என்றாலென்ன, கிறிஸ்து என்றாலென்ன, அவர் வரும் உண்மையை நாங்கள் பிரஸித்தம் செய்கிறோம். ஹிமாசலத்திலிருக்கும் மைத்ரேயரைக் கண்ணோக்குங்கள். அவர் வரவை எதிர் பார்த்திருங்கள். சொற்ப வருஷங்களுக்குள் இப்பூமண்டலத்தில் உலாவுவார்.

B. S இராமசுப்பையர்.

---

166

## ஹிந்து ரஸாயன சாஸ்த்ரம்.*

சுமார் 2,500 வருஷங்களுக்குமுன் தக்ஷசிலை (Taxila) என்னும் நகரமானது ஓர் பெரிய வித்யாஸ்தலமாக விளங்கி வந்தது. அதில் ஜீவகன் என்பவர் மருத்துவம் முதலான வைத்திய சாஸ்திரங்களைக் கற்று, கௌமார ப்ருத்யன் (பாலி, குமாரவச்சன்) என்னும் பட்டமும் பெற்ருன். ஸம்ஸ்க்ருத இலக்கண கர்த்தனுகிய பாணினீயும், ராஜவித்யா நிபுண (Statesman)ஞன சாணக்யனும், அத்தலத்திலேயே கல்வி கற்றவர்களென்று தெரியவருகின்றது.

தவிரவும், வாத்ஸ்யாயனர் இயற்றிய காமஸூத்ரம் என்னும் நூலில், 64 கலைகளைப்பற்றி விவரிக்கு மிடத்தில் ஸ்வர்ணபரீக்ஷை, ரத்னபரீக்ஷை, ரஸாயனநூல், தாதுவித்யா முதலான கலைகளைப்பற்றியும் சொல்லப் பட்டிருக்கின்றது.

மஹாபாஷ்யம் எழுதிய பதஞ்ஜலி என்பவர் இரும்பு என்னும் லோஹத்தைப்பற்றிஒருநூல் எழுதியிருப்பதாய்ச் சொல்லப்படுகிறது.

வராஹ மிஹிரர் (கி. பி. 587 இயற்றிய ப்ருஹத்ஸம் ஹிதை என்னும் நூலில், இரும்பு, ரஸம், முதலானவைகளின் கல்பங்களை (Compounds)ப் பற்றி விவரிக்கப் பட்டிருக்கின்றது.

### ரஸாயனப் பயிற்சி.

கல்பக்கல் (Philosopher's Stone) ஆம், ஸர்வ ஸஞ்ஜீவி (Elixir)யும் கண்டுபிடிக்கச் செய்த முயற்சிகளால் அரேபியர்களிடம் ரஸாயனப் பயிற்சி விருத்தியடைந்தது. 17-ம் நூற்றுண்டு முடிய மேற்குநாட்டில், வைத்ய சாஸ்த்

---

குறிப்பு:—டாக்டர் பி. ஸி. ராய் என்பவரால் லாகூரில் 'Antiquity of Hindu Chemistry' 'ஹிந்து ரஸாயன சாஸ்த்ரத்தின் பழமை' என்னும் விஷயத்தைப்பற்றிச் செய்த உபந்யாஸத்தின் சுருக்கம்.

ரத்தை யநுசரித்தே ரஸாயனமும் விருத்தியடைந்து வந்திருக்கின்றது. இந்தியாவில் யோகசாஸ்த்ரப் பயிற்சி ரஸாயனப் பயிற்சிக்கு மிக்க சாதகமாயிருந்திருக்கின்றது. கஜினி மாமூது என்பவரின் ஸகால ஜீவியான, அல்பாணி என்னும் மகமதிய வித்வான், 'ரஸாயனம் என்பது' மோக்ஷ ஸாதனங்களில் ஒன்று' என்று பதஞ்சலி கூறியிருப்பதாய்ச் சொல்லியிருக்கிறார்.

பிற்காலத்தில், தந்த்ர சாஸ்த்ரங்களை யனுசரித்தே ரஸாயனமும் அபிவிருத்தி யடைந்துவந்தது. ரஸார்ணவம், ரஸஹிருதயம் என்னும் நூல்களில் ரஸம் முதலான சரக்குகளைப் பற்றி விவரிக்கப்பட் டிருக்கின்றது. ரஸம், அப்ரஹம் முதலான வைகளால் சேர்க்கப்படும் கல்பங்களால், ஒருவன் மரணத்தை ஜயிப்பதுடன், கூடுவிட்டுக்கூடு பாயும் தன்மையையும் அடைவான் என்றும், அவன்தான் ரஸஸித்தன் என்றும் கூறப்பட் டிருக்கின்றது.

ரஸம் என்னும்பதம் விசேஷமாய் பாதரஸ(Mercury) த்தை மாத்திரம் குறிக்கும். ஆகிலும், சில சமயங்களில், சில உப்புக்களையும் லோஹங்களையும் குறிக்குமாறு உபயோகிக்கப்பட்டிருக்கின்றது. சரக, ஸுச்ருத ஸம்ஹிதைகளில் ரஸம் என்பது சரீர தாதுக்களையும், தந்திர நூல்களில் லோஹச் சரக்குகளையும், ரஸார்ணவத்தில் ஜராமரண நிவர்த்தி மருந்தையும் குறிக்கின்றது. 16-ம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாதுக்ரியை என்னும் நூலில்தான் ரஸாயனவித்யா (Chemistry) என்னும்பதம் உபயோகப் படுத்தப்பட்டிருக்கின்றது.

மேற்கூறியவைகளினின்றும், ஹிந்துரஸாயனப் பயிற்சியானது, ரஸகல்பங்கள் செய்யும் முறைகளை யனுசரித்தே விருத்தியடைந்து வந்திருக்கின்றதென்று அறிந்துகொ

168



ள்ளலாம். பிருந்தர் (கி. பி. 900) எழுதிய சித்தயோகம் என்னும் நூலில் ரஸமருந்துகளை உபயோகிக்கும் முறைகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இது ரஸமும் கந்தகமும் கலந்த கஜ்ஜலி என்ற ஓர் கல்பம். சக்ரபாணி தத்த (1100 கி. பி)ரும் இதைப்பற்றிச் சொல்லியிருக்கின்றார். ஐரோப்பிய ரஸாயன சரித்திரத்தில் எதியோப் மருந்து (Hethiope's mineral) என்னும் இம்மருந்து, சக்ரபாணி தத்தருக்கு, 600 வருஷங்களுக்குப் பிறகு கண்டு பிடிக்கப் பட்டதாய்ச் சொல்லப்பட் டிருக்கின்றது.

ரஸாயனத்தைப் பற்றிப் பலநூல்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. அவைகளில் ரஸார்ணவம் (கி. பி. 1200) என்பது ஓர் அரியநூல். அதில், ரஸாயனச்சாலை, யந்திரங்கள், சுத்தி, பஸ்மம், சூர்ணம், நீறு, வடிகட்டல், லோஹங்களைக் கனிகளிலிருந்து பிரிக்கும் முறை முதலான ரஸாயன முறைகளைப்பற்றி நன்றாய் விவரிக்கப்பட்டிருக்கின்றது. உலோகங்களை எரிக்கையில், அவைகளின் ஜ்வாலையின் நிறத்தால் அது இன்ன உலோஹம் என்று அறியும் விதமும் அதில் சொல்லப்பட் டிருக்கின்றது.

### காரங்கள்.

காரங்கள் (ஸம்ஸக்ருதம்—க்ஷாரம் - Alkhali) யவக்ஷாரம் (Carbonate of Potash), நவக்ஷாரம், ஸர்ஜிகக்ஷாரம் முதலான பலவகைக்காரங்கள் செய்வதில் பூர்விகர்கள் மிக்கத் தேர்ச்சியடைந்திருக்கின்றார்கள்.

ஸுச்ருத ஸம்ஹிதையில் கார (Mild alkhali)த்துக்கும், எரிகாரத் (Caustic)துக்கும் வித்யாஸம் கூறப்பட்டிருக்கின்றது. காரத்துடன் சுண்ணம் சேர்த்து எரிகாரமாக்கும் முறையைப்பற்றி சக்ரபாணியும், நாகபட்டரும்

169



விவரித்திருக்கின்றார்கள். எரிகாரங்களை, ரணசிகித்சைகளில் விசேஷமாய் உபயோகப் படுத்துவதுண்டு.

### இரும்பு.

தில்லியில், குதப்மினார் என்னும் கோபுரத்தருகேயுள்ள பெரிய இரும்புஸ்தம்பம் ஒன்றே, நமது பூர்வீகர்கள், இரும்பைப்பற்றிய சாஸ்த்ரத்தில் எவ்வளவு தேர்ச்சியடைந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கும்.

### நாகம்.

ரஸகம் முதலான நாகக் கனிகளிலிருந்து நாகத்தைப் பிரிக்கும் முறைகளைப்பற்றி ரஸார்ணவ தந்த்ரத்திலும் ரஸரத்ன ஸமுச்சயத்திலும் விவரிக்கப்பட்டிருக்கின்றது.

### ரத்ன பரீக்ஷை.

ரத்னங்களைப் பரீக்ஷிக்கும் முறைகளைப்பற்றி பூர்வநூல்கள் விவரமாய்க் கூறுகின்றன. அவைகளில் முக்யமானவை

(1) தந்நிறை (Specific Gravity)

(2) உறுதி (Hardness)

(3) நீரோட்டம் அல்லது ப்ரகாசம்.

(4) காரங்களுடன் கலந்து எரிக்கையில் ஏற்படும் மாறுபாடுகள்.

இவைகளைக் கொண்டு ரத்னங்களைப் பரீக்ஷிக்க வேண்டும்.

### ஆறு லோஹங்கள்.

ஸுச்ருதத்திலும், ரஸரத்ன ஸமுச்சயத்திலும், ஆறுவகை லோஹங்களைப்பற்றி மாத்திரம் சொல்லப்பட்டிருக்கின்றது.

170



அவையாவன:—பொன், வெள்ளி, வங்கம்(Tin),ஈயம், செம்பு, இரும்பு. பித்தளையும், வெண்கலமும் கலப்புப் பொருள் (Alloys) என்று கூறப்பட்டிருக்கின்றன.

### அணுஸித்தாந்தம்.

பஞ்சபூதங்களால் அமைக்கப்பட் டிருப்பதாய்ச் சொல்லப்படும் இப்பிரபஞ்சம் யாவும், அணுக்களின் சேர்க்கையால் உண்டானதென்றும், அதைப் பிரித்துக்கொண்டே சென்றால் அது மறுபடி அணுக்களாகவே ஆய்விடுமென்பதும் அணுவாதம் என்னும் இச்சிந்தாந்தத்தின் கொள்கை. இக்கொள்கையைப்பற்றி, சாங்கியம், யோகம், வைசேஷிகம், ந்யாயம் என்னும் தத்வசாஸ்த்ரங்களில் விவரிக்கப் பட்டிருக்கின்றது. அணுவாதம் என்னும் கொள்கையை ஸ்தாபித்தவர் கணாதர் என்பவர். சப்தம் வாயுமார்க்கமாய்ச் செல்லும் முறையைப்பற்றிக் கணாதர் கூறியுள்ள அபிப்ராயமானது தற்காலத்தில் மிக்க ஆச்சரியத்தை விளைவிக்கத்தக்கதா யிருக்கின்றது.

சப்தம், உண்டான ஸ்தானத்திலிருந்து அலையலையாய் நான்கு பக்கங்களிலும் ப்ரஸரி (Radiate)த்துக் கடைசியாய்க் காதிலுள்ள ஜவ்வைத் தாக்குகின்றது. முதலில் உண்டான தொனி காதில் கேட்பதில்லை. கடைசியலையால் உண்டாகும் தொனிதான் கேட்கப்படுகின்றது. ஆகையால், பேரிமுழக்கம் கேட்டேன் என்பது உண்மையல்ல. பேரியின் சப்தமானது, அடுத்த அலையிலடிக்க, அது அடுத்த அலையிலடிக்க, இவ்வாறு கடைசியலைச் சத்தந்தான் காதில் வீழ்கின்றது.

அதேமாதிரி, கணாதர், உஷ்ணத்தைப்பற்றியும் ஒளியைப்பற்றியும் கூறுமிடத்தில், அவைகள் ஒரே பொருளின் இருவிகாரங்கள் என்று கூறியிருக்கின்றார். ந்யாயம்,

வைசேஷிகம் என்னும் சாஸ்த்ரங்களில்,உஷ்ணம்,ஒளி, சத்தம் இம்மூன்றும், பரிஸ்பர்த்த (கம்பன)த்தால் உண்டாகின்றனவென்று கூறப்பட்டிருக்கின்றது.

சரகர் ஜலம், சத்தம், ஒளி என்பவற்றின் மூவகை ஸந்தான (Serial Motions)ங்களைப் பற்றி விவரித்திருக்கின்றார். சக்ரபாணி என்பவர், சத்த அலையானது நீர் அலையைப் பார்க்கிலும் வேகமாகவும், ஒளியைப் பார்க்கிலும் மந்தமாகவும் பரவுகின்றதென்று சொல்லியிருக்கின்றார். சத்த அலையானது நீர் அலையைப்போல் ஒரே தல (Plane)த்தில் மாத்திரம் பரவவில்லை. வாயுமார்க்கமாய் சக்ராகார (Concentric Circles)மாய்ப் பலதலங்களிலும் பரவுகின்றது.

இவ்வுபந்யாஸத்தால், நாம் முக்கியமாய் அறிந்துகொள்ளக்கூடியதாவது, தற்காலத்தில் நவீன நாகரிகங்களில் மிக்கப்பயிற்சியின்மேல் ஏற்பட்டிருப்பனவாகக் கொள்ளப்படும் சிறந்த நூல்களில் பெரும்பான்மை, அக்காலத்திலேயே நமது நாட்டில் அபிவிருத்தியடைந் திருக்கின்றனவென்பதேயாம்.

ஆர். எஸ். நாராயணசாமி ஐயர்.

# வாழ்விசைப்பா.

---

[இது "லாங்பெலோ" (Longfellow) என்ற அமெரிக்கப் புலவர் இயற்றிய "A Psalm of life" என்பதன் தமிழ் மொழி பெயர்ப்பு.]

"வாழ்வென் பதுஓர் வறியகனா" என்றென்பால்
* மாழ்கும் இசையில் †வழுத்திடேல்—சூழ்முயற்சி
இல்லாத வாழ்க்கை இறப்பேகாண்; தோற்றுவன
எல்லாமும் மெய்த்தோற்றம் இல்.

மெய்யேஇவ் வாழ்க்கை; அது மித்தைஇலை. வாழ்வுமுடி(வு)
எய்துமிடம் இல்லை இடுகாடு—நொய்யசிறு
"மண்ணா இருக்கின்றாய் மண்ணாவாய்" என்னுமொழி
‡ஒண்ணாதே ஆத்மாவுக் §கோர்.

இன்பமோ துன்பமோ எய்துவதே நம்வாழ்வின்
¶மன்பயனும் அன்று வழியுமன்று—அன்னவைகள்
இன்றையினும் நாளைநாம் ஏற்றமுறற் காம்செயல்கள்
அன்றன் றியற்றிடுத லாம்.

கல்வி கரையிலவே கற்பவர்தம் நாட்சிலவே;
நல்வலிதீ ரம்வாய்ந்தும் நம்நெஞ்சு—**வல்உறையில்
இட்ட இழவுபறை யென்றடிக்குந் தோறும்நமை
இட்டுச் செலும் சுடலைக் கெண்.

உலகம் எனும்பெரிய ஓர்போர்க் களத்தில்
நிலவும்வாழ்க் கைப்போரில் நில்லா(து)—அலையும், வாய்
இல்லாத கால்நடைபோன் றில்லாமல் என்றைக்கும்
நில்லாய் ஓர் வீரன்என நீ.

---

* மாழ்கும் இசை - அழுகைப்பாட்டு, †வழுத்திடேல்-சொல்லாதே.

‡ ஒண்ணாது - பொருந்தாது. § ஓர் - ஆராய்ந்து பார்.

¶ மன் - சிறந்த.

** வல் உறை - இறுகக்கட்டிய உறை.

* இன்பெத் தனை தரினும் எண்ணேல் †எதிர்வதனை
சென்ற ‡ இறப் பெண்ணித் தியங்கிடேல்—நின்ற
§ நிகழ்வினில் நெஞ் சுருக்கமுடன் நின்றும் பரனை
மிகநினைந்தும் செய் செய் வினை.

சான்றோர்கள் வாழ்க்கைச் சரிதமெலாம் நாமுமவர்
போன்றுயர் வாழ் வெய்திநாம் போங்காலைத்-தோன்றநன்கு
காலம் எனுமணலில் காலடிநாம் வைத்தேகற்
¶ கேலும் எனத் தெரிக்கு மே.

இப்புவிவாழ் வென்னும் இருங்கடலிற் செல்லுகையில்
கப்பல் உடைந்ததனாற் ** கையற்றுத்—திப்பிரமை
தோற்றி அலையுமனச் சோதரர்க்குத் ††தேற்றரவின்
‡‡காற்றிடுமால் அக்கால் அடி.

ஆதலினால் ஏதுவிதி யாயினுநெஞ் சேங்காது
§§ மீ துணிவால் செய்வினைகள் ¶¶ மேவுவமப்—போதுமவை
செய்தபினும்உழைத்துச்செய்வினையாற்றிப்†††பொறையோ
டெய்து பயன் உற்றிடத்தேர் வேம்.

பண்டித ம. கோபாலகிருஷ்ணையர்,
மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்து
அக்கிராசனாதிபதி.

---

* இன்பு - இன்பம், † எதிர்வு - எதிர்காலம்; ‡இறப்பு - இறந்தகாலம். §நிகழ்வு - நிகழ்காலம்.

¶ ஏலும் - கூடும்; முடியும்.

** கையற்று - செயலற்று, ††தேற்றரவு - ஆறுதல். ‡‡ஆற்றிடும் - செய்யும்.

§§மீ-மிக; ¶¶மேவுவம்-விரும்பிச் செய்வோம்; †††பொறை-பொறுமை.

## நக்ஷத்ர தூதர்களின் ஸங்கம். *

### இந்தியர் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் முக்யமான ஓர் விஷயம்.

---

இது உதயதிசை நக்ஷத்ர ஸங்கத்தின் ஓர் பிரிவு. இது சிறு பிள்ளைகளுக்கே ஏற்பட்டுள்ளது. உதயதிசை நக்ஷத்ர ஸங்கம் 1911-ஷு த்தில் இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டது. அதி சமீபகாலத்தில் உலக முழுமைக்கும் ஓர் மஹான் ஞானகுருவாகத் தோன்றப் போவது பற்றி, "அவர் வரப்போகிறார்" என்ற நற்செய்தியை எல்லோருக்கும் அறிவிப்பதற்கும், அவர் வரவை எல்லோரும் எதிர் பார்த்திருக்கும்படி தயார் செய்வதற்கும், ஏற்பட்டது.

லோககுரு, இவ்வுலகத்தில் நிறைவேற்ற வேண்டிய காரியத்திற்கு அநேகர் உதவி செய்யவேண்டிய அவசியம் நேரிடும். அவர் வருங்காலத்தில் அவருக்கு உபயோகமாயிருக்கும்படி, நீ முன்னுடியே பழகிக்கொண்டாலல்லவோ, அவருக்கு உதவியாய் எங்கு போக வேண்டுவாரோ, அங்கு செல்லவும், என்ன செய்யவேண்டுவாரோ, அதைச் செய்யவும் இயலுவாய். உதவி செய்யலாம் என்ற நல்லெண்ணம் மட்டும் இருந்தால் போதாதல்லவா? ஸாமர்த்யமாயும், அழகாயும் உதவி செய்யும் முறையையும் தெரிந்திருக்கவேண்டுமல்லவா? நல்லெண்ணம் மட்டுமிருந்து, திறமை இல்லாவிடில் பிரயோஜநமில்லை. திறமையுள்ள உபகாரிகளாகப் பழக்குவதற்கே, நக்ஷத்ர தூதர்களின் ஸங்கம் ஏற்பட்டுள்ளது. அவர் வருங்காலத்தில் திறமையுள்ள உபகாரிகள் எல்லோரும் ஒருங்கே சேர்ந்த ஓர் ஸங்கம் ஏற்பட்டிருக்குமானல் அவரது பெரிய வேலைக்கு மிகச் சாதகமாயிருக்கும்.

---

*ஆங்கிலத்தினின்று மொழி பெயர்ப்பு—B. S. ராமசுப்பையர்.

குழந்தைகளாகிய நாம் லோககுருவின் வருகைக்காக உழைக்கவேண்டியது மிக அவசியம். நாம் நம்புவதுடன் கூட இன்னும் இச்சங்கத்தில் மெம்பர்களல்லாதவர்களும் கூட அவர் சீக்கிரம் வரப்போகிறார் என்று நம்புகிறார்கள். ஆகையால் அவர் வரும் வழியை நாம் செவ்வை செய்யவேண்டும். ஓர் தலமானது எவ்வளவுக்கெவ்வளவு வழவழப்பாயிருக்குமோ, அவ்வளவுக் கவ்வளவு அதில் ஜலம் ஊற்றின மாத்ரத்தில் இலகுவாய் ஓடுகின்றதுபோல, உலகமானது எப்போது தயாராயிருக்கின்றதோ, அப்போது அவர் தோன்றுவார். வருங்கால மஹிமைக்குரிய சிறுவர்களாகிய நாம் தான் வேலைசெய்ய வேண்டியவர்கள்; அவர் வரும் வழியானது நாளுக்குநாள் செவ்வையாய் ஏற்படுமாறு, இப்பொழுது முதற்கொண்டே நம்மை நாம் சீர்திருத்திக் கொள்ளவேண்டும்.

ஜநங்களுக்கு உபகரிக்கும் பொருட்டு திரும்பத்திரும்ப உலகில் தோன்றும் பிரபு ஒருவரேதான். அவர் ஒருவரையே பற்பலர் பல பல விதமான பெயர்களை வைத்து துதிக்கின்றனர். நாம் அறிவீனத்தால், பிறர் சொல்வனவெல்லாம் தவறு என்று நினைக்கிறோம். உண்மையில் எல்லோரும் ஸரிதான். எவ்விடத்திலிருந்தும் அவரை நாம் ஸந்திக்கலாம். மலையடிவாரத்தின் பல பக்கங்களிலிருந்து பலர் போனபோதிலும், எல்லோரும் உச்சியைக் கடைசியில் அடையலாமல்லவா?

பரமகுருவானவர் உலகிலுள்ள ஜனங்களுக்கு அநுக்ரஹம் செய்யட்டும், அவர் உதவியை வேண்டுகின்ற ஜாதியார்களுக்கு உபகரிக்கும் பொருட்டு, அவர் சீக்கிரம் வரட்டும்.

## மேம்பராதல்.

இருபத்தொரு வயதுக்குட்பட்ட எவரும் இச்சங்கத்தில் ஓர் நக்ஷத்ர தூதனாகச் சேரலாம். இந்தியாவுக்கு மட்

டும் நக்ஷத்ர தூதர்களின் சங்கத்தில் சேர்ந்த மாத்திரத்திலேயே, உதயதிசை நக்ஷத்ர ஸங்கத்திலும் சேர்ந்ததாகத்தான் அர்த்தம். அதாவது நக்ஷத்ர தூதர்களுக்கு 21 வயது ஆனமேல் "உதயதிசை நக்ஷத்ர ஸங்கத்தைச்" சேர்ந்திருப்பதாகவே கருதப்படுவர்; எவ்வளவு சிறுகுழந்தையும்பெற்றோருடைய அநுமதியின்மேல் இச்சங்கத்திற் சேரலாம். இதற்குச் சந்தா ஒன்றும் கிடையாதாகையால், பணத்தால் உதவி செய்யக் கூடியவர்கள் திரவிய ஸஹாயமும் செய்யலாம். இச்சங்கத்தார் அணிந்துகொள்ளும் படியான ஆபரணம் ஒன்றுண்டு. அது எனமலினல் செய்யப்பட்ட ஓர் முக்கோணத்துள், வெள்ளியினல் ஒரு அடையாளம் பதிக்கப்பட்ட ஆபரணம். இது கடிகாரத்தில் தொங்கவிடக்கூடியதாயும், ஊசியுடன் அமைந்ததாய் சட்டை, தொப்பியில் தைத்துக் கொள்ளக்கூடியதாயும் இரண்டு விதமாயிருக்கின்றது.

## கைங்கர்யம்.

இத்தூதர்கள் எவ்விதமான வேலையைச் செய்துவரலாம் என்பதைப் பற்றி, அவரவர் ஊர், பட்டணம் அல்லது ஜில்லாவுக்குரிய கார்யதரிசியை நேரிற் பார்த்தோ, அவருக்கு எழுதியோ தெரிந்து கொள்ளவேண்டும். ஒவ்வொரு மெம்பரும் அல்லது கிளைச்சங்கமும் எவ்விதம் சுற்றுமுள்ள பிறர் பலருக்குஉபயோகமாய் வாழலாம்என்பதைத் தத்தமக்குத் தாமே நிதானித்துக் கொள்ளவேண்டும். சிறு பிள்ளைகளே ஸங்கங்களைக் கூட்டுவதும், அவைகளுக்கு அக்ராஸனம் வகிப்பதும், பேசுவதும், வேலைசெய்யும் முறைகளையும் விதிகளையும் ஏற்படுத்துவதும் அவைகளின் பிரகாரம் நடப்பதுமாக இருத்தல் வேண்டும். இச்சிறு பிள்ளைகள் இன்னும் அநேக குழந்தைகளையும் ஒருங்கே சேர்த்து, அவர்களுக்கும் பரமர் வரும் நற்செய்தியைச்

177



சொல்லலாம். துண்டுப் பத்திரிகைகளையும் பலருக்குக் கொடுத்து அவற்றின் மூலமாயும் இந் நற்செய்தியைப் பரவச் செய்யலாம். அவர்களெல்லோரும் ஒழுங்காய்ச் சபைகள் கூடி, அயலூர்களிலிருந்து பெரிய மெம்பர்கள் இது விஷயமாய் எழுதும் கடிதங்களை ஒருங்கே படித்துத் தெரிந்துகொள்ளலாம். உதயதிசை நக்ஷத்ர ஸங்கத்தின் ஸம்பந்தமான பல சில்லரை வேலைகளைச் செய்வதிலும் ஒத்தாசை செய்யலாம்.

### தம்மைத் தயாராக்கிக்கொள்ளுதல்.

1. ஒவ்வொரு மெம்பரும், "ஒரு நாளையாவது பரோபகாரச் செயல் ஒன்றுவது செய்யாமல் கழிக்கமாட்டேன்" என்று தீர்மானித்து, அதன்படியே பாய் ஸ்கௌட் (Boy Scout) ஸங்கத்தாரைப்போல் தவறுமல் நடக்கவேண்டும்.

2. ஒவ்வொருவரும், ஒவ்வொரு நாளும் தன்னைவிட ஏழைப்பிள்ளை யொன்றுக்கு உதவிசெய்து, அதைச் சந்தோஷிப்பிக்க வேண்டும். அப்படி உதவி செய்வதானது, இனி அவதரிக்கப்போகும் லோககுருவின் காரியம் என்று நினைக்கவேண்டும். அம்மாதிரிக் காரியங்களுக்கு அவருடைய அருளை மேன்மேலும் பிரார்த்திக்க வேண்டும்.

3. எந்த உயிர்ப் பிராணியையும் அன்பாகவும் ஆதரவாகவும் நடத்தவேண்டும். பிறர் யாராவது பிராணிகளைத் தொந்தரவு செய்வதைப் பார்த்தால், உடனே அவர்கள் அவ்விதம் செய்யாதபடி தடுக்கவேண்டும். அவர்கள் அப்படிச் செய்வது நியாயமல்லவென்று விநயமாயும் தைர்யமாயும் சொல்ல வேண்டும்.

4. நக்ஷத்ரத்தைப் பற்றி மநத்தில் எப்போதும் ஞாபகம் வைத்துக்கொண்டு, அதன் பெருமைக்குக் குறைவான எந்தக் காரியத்தையும் செய்யலாகாது, நக்ஷத்ரத்தின் பெருமைக்குக் குறைவான எந்த வார்த்தையையும் சொல்லலாகாது.

5. இதன் மெம்பர்கள் ஒவ்வொருவரும் பரமர் வருங் காலத்தில் ஊழியத்திற்குத் தகுதியுள்ளவர்களாயிருக்கும்படி, இப்போது முதலே தெளிவாயும், வற்புறுத்தியும், குற்றமின்றியும் பேசவும் எழுதவும், பழகவேண்டும்.

### மெம்பராதலுக்கு விண்ணப்பம்.

---

ஜகத்குருவின் வருகைக்கு முன்னோடியாயிருந்து, அவர் வரும் வழியை ஆயத்தம் செய்வேன். அதன்பொருட்டு நக்ஷத்திர தூதர்களின் சங்கத்தில் சேர விரும்புகிறேன்.

பெயர். ______________________

விலாசம். ______________________

______________________________

வயது ____________ கிளைச்சங்கம் ____________

தேதி ____________ ஸ்வபாஷை ____________

குறிப்பு:—இதிற் சேர விருப்பமுள்ளவர்கள் இதன் மேலேயுள்ள அப்ளிகேஷன் பாரத்தைப் பூர்த்தி செய்து, சென்னை அடையாற்று உதயதிசை நக்ஷத்திர சங்கக் காரியதரிசியவர்கட்கு அனுப்ப வேண்டும் அல்லது உள்ளூர் நக்ஷத்ரஸங்கக் காரியதரிசியிடம் கொடுக்கவேண்டும்

# சிறுவர்க்குரிய விஷயம்.

## மத்கலரின் ஆத்ம தியாகம்.

ஆத்மதியாகம் என்பது தன்னுடைய க்ஷேமத்தைக் கூடக் கவனியாமல் பிறருக்கு உபகரிப்பதேயாகும். சிலாக்யமான தர்மத்தை யநுஸரிப்பது எப்போதும் மிகச் சிரமமான கார்யம். நம்மிடத்தில் ஏராளமாயிருக்கும்போது நாம் பிறருக்கு நல்ல மநத்துடன் கொடுக்கிறோம். ஆனால் அதிக பிரயத்நத்தின்மேல் நாம் அடைந்திருக்கும் எதொன்றையும், பிறருக்குக் கொடுப்பதென்றால் இலேசாய் மநம் வருகிறதில்லை. அந்யாய வழிகளில் ஏராளமாய் திரவியம் ஸம்பாதித்துப், பிறகு அதை நல்ல தானங்கள் செய்வதைக்காட்டிலும், நம்மாலியன்ற அற்ப உதவியை யோக்யன் ஒருவனுக்கு (நம்முதவியைப் பெறத் தகுதியுள்ளவனுக்கு) நல்லெண்ணத்தோடு கொடுத்தலே நமக்கு நற்பயனளிக்கும். பசுவைக்கொன்றுசெருப்பு தானம் செய்யலாமா? மத்கலரின் கதையால், அவர் எவ்விதம் சிறிது தாந்யத்தைக் கொடுத்து தேவர்களாலும் மனிதர்களாலும் கொண்டாடப்பட்டு ஸ்வர்க்கத்தை யடைந்தார் என்பதை நாம் *அறியலாம்.

முன் ஒரு காலத்தில் குருக்ஷேத்திரத்தில் மத்கலர் என்று ஓர் ரிஷி இருந்தார். அவர் மஹா ஸத்யஸந்தர், அவருக்குக் கோபமே கிடையாது. அவருக்கு யாரிடத்திலும் பகை யென்பதே கிடையாது. அவர் படாடோபமில்லாமல் அமரிக்கையுள்ளவராகவே வஸித்து வந்தார்.

---

* ஸெண்ட்ரல் ஹிந்து காலேஜ் ஸ்தாபகர்களால் ஹிந்து வாலிபர்களுடைய நன்மையை உத்தேசித்து எழுதப்பட்ட ஆங்கில வாசகத்தின் தமிழ்மொழி பெயர்ப்பு.

அதிதிகளுக்குக் கொடுத்து மிஞ்சும் உணவை மட்டும் தாம் புசித்து வந்தார். அவர் செய்து வந்த தர்மத்தால் தேவர்கள் திருப்தியடைந்து அதனுல் அவருக்கு ஐசுவர்யம் மேன்மேலும் அதிகரித்தது அவரிடம் வந்த எவரும், அவர் அன்புடன் உபசரித்து வழங்கும் ஆஹாரத்தை யேற்றுக் கொள்ளாமற் போகார்.

இவ்விதமிருக்கையில் ஒரு சமயம் முனிவர் ஒருவ அவரிடம் வந்து ஆஹாரம் வேண்டினர்; மத்கலர் அவரை "வருக, வருக" என்று உபசரித்து, அர்க்ய பாத்யங்கள் (கை, கால் கழுதவற்கு ஜலம்) கொடுத்து, ஆஹாரத்தையும் அவர் முன்பாக ஸமர்ப்பித்தார், முனிவர் மிகப் பசியாயிருந்தமையால் எல்லாவற்றையும் வெகு சீக்கிரம் சாப்பிட்டு, இன்னும் வேண்டும் என்று கேட்டார். மறுபடியும் மத்கலர் வேண்டிய உணவளித்தார். முனிவரும் சாப்பிட்டுப் புறப்பட்டுவிட்டார். பிறகு சொற்ப நேரத்திற்கெல்லாம் முனிவர் திரும்பவந்து ஆஹாரம் வேண்ட, மத்கலர் தமக்குக்கூட இல்லாமல் தம்மிடமிருந்த உணவனைத்தையும் முனிவருக்கே கொடுத்துவிட்டு தனக்குணவு தேட வெளியே சென்றார். மத்கலருக்கு மிகவும் பசியாயிருந்தபோதிலும், கொஞ்சமேனும் கோபமாவது அஸந்துஷ்டியாவது அடையவில்லை. முனிவரோ இப்படி ஆறுதரம் திரும்பத் திரும்ப வந்து மத்கலரிடமிருந்த ஆஹாரம் முழுமையையும் சாப்பிட்டுவிட, மத்கலரும் ஆறுதரம் வெளியே போய் உணவுக்கு வேண்டிய தாந்யத்தைச் சேகரித்து வந்தார். கடைசியாக முனிவர் மத்கலரிடம் திருப்தியடைந்து, பின்வருமாறு புகழ்ந்து சொன்னர் "கஷ்டப்பட்டு ஸம்பாதித்ததை மிகுந்த அன்புடன் பிறருக்குக் கொடுப்பது மிகச் சிரமமான கார்யம். ஆயினும் நீ சிறந்த பக்தனுகையால் இவ்விதம் செய்தாய். உன்னுடைய புண்யச் செயல்களி

லல் மஹான்களுடைய கிருபையை நீ அடைந்தாய், பரமானந்தத்தையும் அடைந்தாய்" இவ்விதங்கூறி முனிவர் விடைபெற்றுச் சென்ற பிறகும், மத்கலர் சிறந்த தர்மிஷ்டராயும் திருப்தியுள்ளவராயுமிருந்து, கடைசியாய் நித்ய வஸ்துவை அறிந்தார்.

இவ்விதமே ஸ்வர்ணமணிமாலைச் சங்கத்தாராகிய நீங்களும், பிறருக்குக் கொடுக்கவேண்டி நேரும்போது ஸந்தோஷமாயும், சாந்தமான அன்போடும் கொடுக்கவேண்டும். அநேகம் பிள்ளைகள், தமது அக்காள் தங்கை, அல்லது அண்ணன், தம்பி இவர்களுக்குத் தம் தாயார் சிறிது பக்ஷணம் அதிகமாகக் கொடுத்துவிட்டால், முரண்டு பிடித்து அழுவதைப் பார்த்திருக்கிறேன். ஸ்வர்ணமணிமாலைச் சங்கத்தில் சேர்ந்திருக்கும் பிள்ளைகள் இம்மாதிரியான கெட்ட குணத்தை விலக்கி, மத்கலரைப்போல் உயர்ந்த குணமாகிய தியாகம் என்பதைக் கடைப் பிடிக்கவேண்டும். தியாகம் என்ற குணத்தை நீங்கள் பெறுவதற்கு முன், உங்களெதிர்ப்படும் எவ்வுயிரையும் அன்பாகச் சோதரர் போல் நடத்திடவே தொடங்கவேண்டும்.

வஸந்தாநந்தன்.

---

182

## சமாசாரம்.

பிரஹ்மஜ்ஞான சபை லாட்ஜ் இன்ஸ்பெக்டர் பிரஹ்மஸ்ரீ L. சுப்பிரமணிய ஐயரவர்கள், மதுரை சேதுபதி உயர்தர கலாசாலை மாணவர்களுக்கு, அவர்களின் ஆங்கிலத் தமிழ்ச் சங்கங்களின் பிரயோஜனார்த்தம் செப்டம்பர்மீ 3, 6-உ களில் ஆங்கிலத்தில் மதசம்பந்தமான கல்வியின் அவசியத்தைப் பற்றியும், தமிழில் "சந்தியாவந்தனம்" என்பதைப் பற்றியும் முறையே உபந்யசித்தார். இக் கலாசாலையின் தலைமை உபாத்தியாயர் தமது பள்ளிக்கூடத்து மாணவர்களுக்கு மதசம்பந்தமான மூலதத்துவங்களைத் தற்கால நிலையில் அநுஷ்டானத்திற் குபயோகமாகும்படி கற்றுக்கொடுக்க, பிரஹ்மஜ்ஞான சபையைச் சேர்ந்த உபந்யாசகர்களின் உதவியை ஆதரவுடன் அங்கீகரித்து வருகிறார். பிரஹ்மஸ்ரீ L. சுப்பிரமணிய ஐயரவர்கள் தம்முடைய உபந்யாசத்தில் சந்தியாவந்தனம், மந்தமான அதிகாரி முதல் உயர்ந்த பக்குவிவரை எல்லோருக்கும் பிரயோஜனமாயிருக்கிற தென்பதைப்பற்றி வற்புறுத்திச் சொன்னதுமல்லாமல், உலகத்திலுள்ள ஏனைய மதங்களிலும் வெவ்வேறு மாதிரியாக சந்தியாவந்தனத்தின் அநுஷ்டானம் இருக்கவே இருக்கின்றது, என்பதையும் தெளிவுற விளக்கிக் காட்டினார். இந்த சந்தியாவந்தனத்தின் கருத்தானது, அதையப் பியசிப்போர்களுக்கு, ஆத்ம ஸாக்ஷாத்காரத்தைக் கொடுத்து, அதன் பயனாய் அவர்களை, மநுஷ்யவர்க்கத்தின் பொது நலங்கருதி உழைக்கச் செய்வதேயாகும் என்றும் இதையுத் தேசித்தேதான் மதங்களுக்குள் எல்லாம், புராணமானதும் ஏராளமான தத்துவங்களடங்கியதுமான ஹிந்துமதமும் தன்னைச் சார்ந்தவர்களுக்கு சந்தியாவந்தனத்தை விதித்திருக்கிறது என்றும், முடிவுரை கூறப்பட்டது.

8ம்-உ புதன் கிழமையன்று அன்னக்குழி மண்டபத்தில் மாணவர் செந்தமிழ்ச்சங்கத்துப் பிள்ளைகளுக்கு "ஸ்வதேசாபிமானம்" என்ற ஓர் விஷயத்தை உபந்யசித்தார் மற்றைய பள்ளிகூடங்களிலிருந்தும் பலர் வந்திருந்தனர். அச்சமயம் ஸ்ரீமத் ம. கோபால கிருஷ்ணஐயர் அக்கிராசனம் வகித்தனர்.

---

இராமேசுவரம் தேவஸ்தானத்தைச் சேர்ந்த ஸம்ஸ்கிருத பாடசாலை:—இது இம்மாசம் 5உ மதுரைமாநகரில் மங்களகர

மாய் ஸ்தாபிக்கப்பட்டது. இப்பாடசாலை நமது முன் பத்திராதிபராயிருந்து இப்போது காலஞ்சென்ற நமது, ப. நாராயண ஐயரவர்கள் சிரத்தையுடன் கைக்கொண்ட விடாமுயற்சியின் நற்பயன் என்பதைப் பலரும் அறிவர். ஐயரவர்கள் தமது கடைசிக்காலம் வரை, வெகு காலத்திற்கு முன்னரே இப்பாடசாலையை ஊர்ஜிதத்திற்குக் கொண்டுவர முயன்றும், இப்போதுதான் அதற்கு நற்காலம் உதித்திருக்கின்றது. மதத்திற்கும் தினசரி நடபடிக்கைகளுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்று இப்போது பலர் நினைக்கின்ற அக்ஞானத்தை முற்ற ஒழித்து, மதமானது பிரதி மனுஷ்யனுக்கும் அவனுடைய தினசரி ஒழுக்கத்தைச் சீர்ப்படுத்துவதற்கு ஏற்ற சாதனம் என்ற அபிப்பிராயத்தை நமது ஹிந்து ஜன சமூகத்தில் இப்பாடசாலையானது பரவச் செய்யவேண்டுமென்பதே எமது பிரார்த்தனை. இது எப்படி சாத்தியமெனில் பாடசாலையில் பயிலும் மாணவர்களை நமது ஹிந்து சாஸ்திரங்களிலும் ஸமஸ்கிருத காவ்யங்களிலும், தேர்ச்சியுள்ளவர்களாக மட்டும் செய்வதோடில்லாமல் ஸுசீலர்களாயும், சிறந்த ஸ்வதேசாபிமானிகளாயும், தம் அறிவாலும், ஒழுக்கத்தாலும், பிறரையும் நல்வழியில் பிரவிர்த்திக்கத் தூண்டுவோராயும், குறித்த காலங்கடவாது நடத்தல், தேகப்பயிற்சி, சொன்ன சொல்லை நிறைவேற்றுதல், துணிமணிகள், சாமான்கள், இருக்குமிடம் முதலியவற்றைச் சுத்தமாய் வைத்தல், எச்சிறு கார்யத்தையும் அழகுறச் செய்து முடித்தல், இத்தகைய அற்பமான நுட்பங்களிலும் தேர்ந்தவர்களாயும், தேசாந்தரங்களிலும், பாஷாந்தரங்களிலும், மதாந்தரங்களிலும் உள்ள மேன்மைகளை சமதரிசன புத்தியுடன் தீவிரமான உத்ஸாஹத்துடனும் நாடுவோர்களாயும் பழக்கப்படுத்துவினால் இயலும்.

---

வேதாரண்யத்திலிருந்த பென்ஷன் தாசில்தார் N. பிச்சை பிள்ளையவர்கள் இம்மாசம் 17உயில் இவ்வுலகை நீத்து மறு உலகையடைந்தார், இவ்வுலகிலிருந்தவரை பிரஹ்மக்ஞான விஷயமாயும் முக்கியமாய் சிறுவர்களுக்குரிய ஸ்வர்ணமணிமாலை விஷயமாயும் மிகச் சிரத்தை யெடுத்து உழைத்துவந்தார். ஆகையால் மறு உலக வாழ்வு அத்தகையருக்கு சுககரமாகவேயிருக்கும். பிரஹ்மக்ஞானிகளாகிய நாம் மற்றையோரைப்போல் விஸனப்படுதல் உத

184



வாது. நம்முடைய அன்பான சிந்தனைகளால் மட்டும் அவருக்கு உதவி செய்யக்கூடும். அவருடைய பிரிவாற்றுமையால் துயருறும் உறவினர்க்கு இதன் மூலமாய் எமது அநுதாபத்தை வெளியிடுகிறோம்.

கடலூர் கலெக்டருக்கு பெர்ஸனல் அஸிஸ்டண்டாயிருந்த ஸ்ரீமான் V.பாலகிருஷ்ணம்பிள்ளையவர்கள் 27உயில் சென்னையில் காலஞ்சென்றுர், இவரும் நமது பிரஹ்மக்ஞான ஸபைச் சகோதரருள் ஒருவர். உத்யோக காலத்தில் நல்ல நீதிமான் என்றும் அமரிக்கையுள்ளவரென்றும் பேரெடுத்திருக்கிறுர்.பிரஹ்மக்ஞான ஸபையில் விசேஷ பற்றுள்ளவர். இத்தகையரெல்லாரும் லோகாந்தரங்களில் வாழ்க்கை சீக்ரகாலத்தில் முடிவு பெற்று இப்பூவுலகிற்கு விரைந்து திரும்புவார். இவரது குடும்பத்தார்க்கும் நமது அநுதாபத்தை இதன் மூலமாய் வெளியிடுகிறோம்.

---

## புத்தக வரவு.

மெல்லின்ஸ் ஆகாரத் (Mellin's Food) திற்கு ஸோல் ஏஜண்டுகளான மெஸ்ஸர்ஸ் ஒக்ஸ் அண்கோ., (மதராஸ்) குழந்தைகளின் அபிவிருத்தியைக் குறிக்கத்தக்க ஓர் புஸ்தகம், 96 பக்கங்களுள்ளதாய், அழகான காலிகோ பைண்டு, கில்ட் எழுத்தால் "The Progress Book" என்று அச்சிட்டு எமக்கு அனுப்பியிருக்கிறுர்கள். ஒவ்வொருவருடைய பால்யகால சரித்திரத்தையும், ஒழுங்காய் எழுதி வைக்கத்தக்க விதமான, பல விவரங்களடங்கிய தான் அப்புத்தகத்தை, குழந்தைகளிடத்து அருமை வாய்ந்த பெற்றோர்கள் வாங்குதல் சிலாக்யம். இரண்டணு ஸ்டாம்பு, "மெஸ்ஸர்ஸ் ஒக்ஸ் அண்கோ., மதராஸ்" என்ற விலாசத்துக்கு. நமது பூர்ணசந்திரோதய விளம்பரத்தைப் பார்த்ததாகவும் குறிப்பிட்டு ஓர் கடிதத்துடன் அனுப்பும் முதல் நூறு பேர்களுக்கு அப்புஸ்தகம் இனுமாய், அனுப்பப்படும்.

---

ஞாநபாநுவும், லோகோபகாரியும்:-தியாஸபியில் தமக்கிருக்கும் துவேஷத்தை சாடை மாடையாக வெளியிடுகிறுர்கள். லோகோபகாரிக்கும், ஞாநபாநுவுக்கும் துவேஷமென்பது பெரிய இடையூறாகும். ஞாநத்தைப் பரவச்செய்து லோகத்திற்கு உபகரிக்கவேண்டுமாயின், ஸமதரிசன புத்தியுள்ள குணக்ராஹிகளாய் நடைபெறவேண்டும்,

# தியானக்கிரம விஷயம்.

## சூலை மாசம்.

(10) வம்புப்பேச்சினால் உண்டாகும் கெடுதிகளாவன:—

(i) நீ எப்போதும் நல்ல சித்தவிர்த்தியைக் கொள்ள வேண்டியிருக்க, கெட்ட சித்தவிர்த்தியையே கொண்டு உன் அயலார் மனங்களையும், அதனாலேயே வியாபிக்கச் செய்து உலகத்தில் துக்காபிவிருத்தியைச் செய்வோனாவாய்.

(ii) நீ நினைத்த துர்க்குணமானது உன் சகோதரனிடமிருக்குமானால், அதை நீ போஷித்துப் பலப்படுத்துகிறாய். நீ உனது சகோதரனைக் குணப்படுத்த வேண்டியிருக்க, இவ்விதம் நீ அவனை மிகவும் கெடுக்கிறாய் அல்லது அவனை உன்னுடைய எண்ணமானது கெடுதியைச் செய்ய தூண்டுகிறது.

(iii) நல்ல எண்ணங்களால் உன் சித்திவிர்த்தி நிறைந்திருக்க வேண்டியிருக்க, உனது கெட்ட எண்ணங்களால் அதை நீ நிரப்பிக் கொள்ளுகிறாய், உனது அபிவிருத்தியும் மங்குகின்றது; உன் அகத்தைப்போலவே புறமும் விளங்குகின்றது. உன் முக மலர்ச்சியும் சரீரத்திற் செழிப்பும் குன்றி அவலக்ஷணமான தோற்றம் ஏற்படுகின்றது.

(iv) இவ்விதவம்பன் வேறு மனிதர்களையும் தன் பாதகத் தொழிலுக்குக் கூட்டாளியாகச் செய்து கொண்டு தன்னாலியன்றமட்டும் முயலுகிறான். பிறகு இவனோடு அவர்களும் சேர்ந்து ஒருவன் மீது கெட்ட சிந்தனைகளைப் பிரயோகிக்கிறார்கள்.

186



(11) வம்புப்பேச்சு எவ்வளவு இழிவுள்ளதென்றும் கோரமானதென்றும் நீ தெரிந்துகொள். இதை நீ முற்றிலும் ஒழிக்கவேண்டும். (ii) ஒருவனையும் நீ இகழ்ந்து பேசாதே.

(iii) எவரேனும் பிறரை இகழ்ந்து பேசுவாராயின் நீ செவி கொடாதே.

(iv) நீ அத்தகையருக்குச் சாந்தமாய்ச் சொல்லு "நீ சொல்வதொருக்கால் நிஜமல்லாமலிருக்கலாம், நிஜமாயிருந்தாலுங்கூட அதைப் பற்றிப் பேசாதிருப்பது நலம்."

(12) எவனைப் பற்றியாவது நீ ஏதாவது சமாசாரம் கேட்டால் நீ அதை வெளிப்படுத்தாதே. அது பொய்யாயிருக்கலாம். நிஜமாயிருந்தாலுங்கூட நீ அதைப்பற்றிப் பேசாமலிருப்பது நல்லது.

(13) பிறர் செய்யுங்காரியங்களுக்கு நீயாக ஒரு கருத்தைக் கல்பிக்காதே. அதாவது இன்ன உத்தேசத்தைக் கொண்டு செய்திருக்கலாம் என்று உன் எண்ணம், போன போக்குப்படி ஒரு காரணம் கற்பிக்க முயலாதே. அவனுடைய செய்கைகளுக்கு நீ நினையாத காரணங்களிருக்கலாம். அவைகள் அவனுடைய குருநாதனுக்கு மட்டும் தெரியவரும்.

(14) மற்றவர்களைக் குறித்து உனக்குத் தெரியாத விஷயங்களில் நீ அபிப்பிராயங் கொள்ளலாகாது.

(15) கருதிச்செய்யும்கொடுஞ்செயல்:-வேண்டுமென்றே வேறொரு ஜீவஜந்துவுக்கு உபத்திரவஞ் செய்வதாகும். எல்லாப் பாபங்களிலும் இது பெரும்பாபம். இது மநுஷ்ய பிரவிர்த்தியல்ல அசுரச் செய்கை.

மனிதர்கள் இதைத்தினசரி செய்துகொண்டே வருகிறார்கள்.

(16) திருஷ்டாந்தங்கள்:—

i ரோமன் காதலிக் மத விசாரணை சங்கத்தார் இதைச் செய்தார்கள்; ii தங்கள் மதத்தின் பெயரால் இதை மதாபிமானிகளும் செய்துவந்தார்கள். iii ஜீவராசிகளின் உடற்கூறு சாஸ்திர பரீக்ஷகர்கள் இன்னும் இதைச் செய்கிறார்கள். iv அனேகம் பள்ளிக்கூட உபாத்தியாயர்களும் இதை வழக்கமாய்ச் செய்கிறார்கள். v அநேகர்கள் வெளியிற் சென்று, வேட்டை விளையாட்டென்று சொல்லி புத்தி பூர்வமாய் ஈசுவர சிருஷ்டிகளாகிய ஜீவஜந்துக்களைக் கொல்கிறார்கள்.

vi பிறனொருவன் மனத்தை நோகச் செய்யவேண்டுமென்ற கருத்துடனேயே வன்சொல் உரைப்பவனும் கொலை செய்வோனாவன்.

(17) ஈசுவரனிடத்துச் செலுத்தவேண்டிய அன்பை உத்தேசித்தே, சமயம் நேரிடும்பொழுது இவ்வித கருமங்கள் (மேற்கண்ட 1-முதல் 5-வரையுள்ள திருஷ்டாந்தங்கள்) கூடாவென்று நீ தெளிவாய் எடுத்துரைக்கவேண்டும்

(18) கருதாது செய்யும் கொடுஞ் செயல்:—சாதாரணமாய் ஆலோசியாமல் நேரிடுகிறது. அசாக்கிரதையாலும் இது நேரிடுகிறது. ஒவ்வொரு செய்கையும் எவ்விதம் இதரர்களை பாதிக்குமென்பதைப் பற்றி நினைக்க மறப்பதினாலும் நேரிடுகிறது.

உதாரணம்:

| | |
|---|---|
| i தான் நியாயமாய்க்கொடுக்கவேண்டிய சம்பளம், கூலி இவைகளைச் சரியாய்க் கொடுக்காமல் பிடித்துக் கொள்ளுகிறது. | பணத்திலும் இதர பொருள்களிலுமுள்ள ஆசையால் |
| ii தன் மனைவி மக்களுக்குத் தக்க உணவு அளிக்காமலிருக்கிறது. | ஷை |

iii ஆத்மாக்களையும் சரீரங்களையும் கெடுக்கிறது. } தன் ஆசையை திருப்தி செய்து கொள்ளுவதில் மாத்திரம் கவனமா யிருந்துகொண்டு.

iv தன்னுடைய வேலையாட்களுக்கு குறித்த தினத்தில் சம்பளங் கொடுக்காமலிருப்பது. } தன்னுடைய சொற்ப தொந்தரவை உத்தேசித்து;

v சிற்சில சமயம் கவனியாது சொல்லுமொரு வார்த்தை வர்மத்துடன் சொல்லிய வார்த்தைபோல் துன்பத்தை விளைவிக்கும்.

(19) உனக்கு மேன்மார்க்கத்தில் பிரவேசிக்க இஷ்டமிருந்தால், நீ செய்யுங்காரியங்கள் என்ன பலன்களை விளைவிக்குமென்று நீ ஆலோசிக்க வேண்டும். இல்லாவிடில் யோசியாமல், நீ கொடும் பாதகங்களுக்கு உட்பட்டுவிட வேண்டிவரும்.

கருதாது செய்யும் கொடுஞ் செயலைப்பற்றி நீ ஜாக்கிரதையாக விருக்கவேண்டும்.

(20) மித்தியாசாரம்; இது இன்னொரு வலிய கேடு இது பயங்கரமான பாதகத்தை யுண்டாக்கி யிருக்கின்றது. இதற் கடிமைப்பட்டவன், தன்னைவிட அறிவுள்ளவர்களை நிந்தித்து, தான்செய்யும் பிரகாரம் அவர்களையும் செய்யும்படி பலவந்தம் செய்கிறான். இக்கொடிய மாயாதர்மமயக்கத்துக் குட்பட்டு அன்பே வடிவாய்க் கொண்ட ஈசுவரன் பெயரைவைத்தே அநேகம் பாதகங்கள் நடந்திருக்கின்றன.

(21) உதாரணம். (1) பிராணிகளைப் பலிக்கொடுக்க வேண்டுமென்பது மித்தியாசாரம். இதைப் பார்க்கிலும் கொடிய மித்தியாசாரம், மனிதன் தனது ஆகாரத்திற்கு மாமிசத்தை ஆவசியகப் படுத்துவது.

(இன்னும் வரும்)

கே. யஸ். இராமசந்திர ஐயர்.

இச்சபையோர் தத்துவ தரிசநம் ஒன்றையே நோக்கி, ஆத்மக்ஞான விஷயமாய் உழைத்து, நாஸ்திகத்தைத் தொலைத்து, மத விஷயங்களில் அறிவுடன் கலந்த சிரத்தையை விளைத்து, மநுஷ்ய வர்க்கத்திற்குபகரிப்பவராவர். இதிற் சேர விரும்புவோர் எம்மதஸ்தராயும், அல்லது ஓர் மதத்தையும் தழுவாமலுமிருக்கலாம். ஷை மூன்று நோக்கங்களே இச்சபைக்குப் பிரதானம். பிறமதங்களையும் பாரபக்ஷமின்றி ஆராய்வதால், மதத்துவேஷம் நீங்கியவர்களாயும், அபிப்ராய பேதங்களால் ஒற்றுமை குன்றாதவர்களாயும் இச்சபையோர் உளர். வெறும் நம்பிக்கையால் மட்டுமேல்லாமல், தத்துவத்தை நேருக்கு நேராய் அறியவேண்டிய அவாவினாலேயே, இச்சங்கத்தினர் அனைவரும் ஒரு மனப்பட்டிருக்கின்றனர். தேர்ந்த படிப்பினாலும், ஆழ்ந்த சிந்தனையாலும், சுத்த சர்யையாலும, உயர் நோக்கங்களிற் கொள்ளும் ஸ்திர பக்தியாலுமே ஒருவன் தத்வத்தை யடையக் கூடும். தீவ்ரமான உழைப்பின் பயனான அநுபவத்தால் தான் ஒருவனுக்கு உண்மை கை கூடும். நிர்ப்பந்தத்தால் கட்டுப்படுத்தும் கொள்கை எதுவும் உண்மையாகாது, அறிவில்லாமல் நம்பலாகாது. எல்லோரிடத்தும் பொறுமையும், பொறுமையற்றவர்களிடமுங்கூட, நமது கடமையாகக் கொண்டு, அன்பையே காட்டுவதும், அறிவிலிகளை நிந்தித்து துவேஷியாமல், அவர்களுக்கு போதிப்பதுமே சிலாக்கியமெனக் கொள்வதோடும், ஒவ்வொரு மதமும் பிரஹ்மக்ஞானத்தின் ஓர் அம்சமென்றும், அதனால் அதை அசட்டை செய்யாது படிக்கவேண்டுமென்றும் ஒருவரையும் ஓர் மதத்தினின்று இன்னொரு மதத்திற்குப் பெயர்க்காமல், அந்தந்த மதத்தில் அழகாயுள்ள உபதேசங்களை யநுஸரிக்கச்செய்தலே மேன்மை யென்றும் இச்சபை வற்புறுத்துகின்றது. உண்மையே இச்சபையின் உயர் லக்ஷ்யம். உபசாந்தமே இச்சபையோரிடம் விளங்கும்.

பிரஹ்மக்ஞான தர்சனம் எல்லா மதங்களுக்கும்ஆதாரமான தத்துவங்களின் தொகுதி. அது இம்மதத்தைத் தான் சார்ந்தது, அதைத்தான் சார்ந்தது என்று சொல்லுதல் இயலாததாம். அதன் தத்துவ விளக்க முறையானது, உலக வாழ்க்கையிற்றோன்றும் ஸம்சய விபரீதங்கள் அனைத்தையும் விலக்கி, எத்தகைய உயர்ந்த நீதி நெறியுடனும், பரமகாருண்யத்தோடும் விகாஸமுறையானது நடைபெற்று வருகிறது என்பதை நுண்ணிய விவரங்களுடன் பிரகாசப் படுத்துகின்றது. அகண்டமான வாழ்க்கையில் மரணமென்பது அடிக்கடி நேரும் ஓர் ஸம்பவமென்றும், ஸ்தூலதேஹம் நீங்கியவுடன் கட்டவிழ்த்து விடப்பட்டவன்போல, சிரமத்தினின்று விடுபட்டு அதிமேன்மையான ஸூக்ஷ்மலோகத்தில் ஜீவன் விழித்துக்கொள்கிறானென்றும் விவரிக்கின்றது. ஞானிகள் நிதர்சனமாயறிகின்றவாறே, நமது யுக்திக்கும் பொருத்தமாக, பற்பல மதங்களின் கொள்கைகளையும் ஆசரணைகளையும் ஸூக்ஷ்ம அர்த்தங்களுடன் விளக்குகின்றது.

பிரஹ்மக்ஞான ஸபை அங்கத்தினர்கள் இவ்வுண்மைகளைப் படித்து, அவைகளின் பிரகாரமே ஆசரிக்க முயலுவர், கற்று, உணர்ந்து அடங்கவும், உயர்நலம் பெறவும், விடாமுயற்சியோடுழைக்கவும், பிரியப்படும் ஒவ்வொருவரும் இச்சபையிற் சேரலாம். அப்படிச்சேர்ந்த ஒவ்வொருவரும் போலியாக இராமல், உண்மையான பிரஹ்மக்ஞானியாகவே ஒழுகுவாராக.

# தமிழ்ப் புத்தகங்களின் விளம்பரம்.

| | | ரூ. அ. ப |
|---|---|---|
| 1. | வேதாந்த சூளாமணி | 1—4—0 |
| 2. | பதஞ்சலியோக சூத்திரம் | 1—0—0 |
| 3: | இயேசுகிறிஸ்துஎன்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல் | 1—0—0 |
| 4. | மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையாரின் யோக உபந்யாஸங்கள் | 0—12—0 |
| 5. | மனிதன் வமிசாவளியின் உண்மை | 0—8—0 |
| 6. | பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும் | 0—6—0 |
| 7. | ஔவையோகக்குறள் (தமிழினின்று ஆங்கிலமொழிபெயர்ப்பு) | 0—4—0 |
| 8. | ஸர்வசமய ஐகமத்ய ஸாரஸங்கிரகம் | 0—4—0 |
| 9. | இந்துமத தூஷணையின் பரிகாரம் | 0—4—0 |
| 10 | மௌநவாக்கு | 0—2—0 |
| 11. | ஸந்மார்க்க தீபம் | 0—2—0 |
| 12. | மாதுஸ்ரீ அன்னிபெஸ்ண்ட் அம்மையார்சரித்திரம் (படத்துடன்) | 0—1—0 |
| 13. | மஹாலய பக்ஷமும் நவராத்திரியும் | 0—1—0 |
| 14. | எண்ணங்களின் இரஹஸியம் படத்துடன் | 0—1—0 |
| 15. | காயத்ரீ | 0—1—0 |
| 16. | காயத்ரீராமாயணம் (ஸமஸ்கிருதமூலமும் தமிழ்மொழி பெயர்ப்பும்) | 0—1—0 |
| 17. | மாதுஸ்ரீ ஹெலினாம்பாள் அம்மையார் சரித்திரம் | 0—0—6 |
| 18. | ஹிந்து என்பவன் எவன்? | 0—0—6 |
| 19. | லோககுருவின் அவதாரங்கள் | 0—0—6 |
| 20. | பகவான் கௌதம புத்தரின் சரித்திரம் | 0—0—6 |
| 21. | வெள்ளியம்பலம் என்ற ஞாநிகளின் சங்கம் | 0—1—0 |
| 22. | மோனம் என்பது ஞானவரம்பு | 0—0—6 |
| 23. | உதாஸீந ஸாது ஸ்தோத்ரம் (ஸம்ஸ்கிருத மூலமும் தமிழ் மொழி பெயர்ப்பும் | 0—6—0 |
| 24. | மஹாத்மாக்களும் அவர்களையடையும் மார்க்கமும் | 0—0—6 |
| 25. | தேவாலயம் | 0—0—3 |
| 26. | பிரஹ்மஞ்ஞாநமும் பிரஹ்மஞ்ஞான சபையும் | 0—0—6 |
| 27. | ஸந்மார்க்கமுறையில் ஹிதோபதேசம் | 0—1—0 |
| 28. | மநீஷா பஞ்சகம் | 0—1—0 |
| 29. | குருசிஷ்ய ஸம்பந்தம் | 0—1—0 |

---

மேற்கண்ட புத்தகங்கள் தேவையானவர்கள் "மதுரை பிரஹ்மஞ்ஞாந ஸபை பிரஸிடெண்டு அவர்களுக்கு" அல்லது "மானேஜர் தியாஸாபிகல் பப்ளிஷிங்ஹவுஸ், அடையாறு, சென்னை" என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். 100 புத்தகங்களுக்கு 20 கமிஷன் கொடுக்கப்படும்.